உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உ௩.] ரக்தாக்ஷி ௵ பங்குனி ௴ [பகுதி ரு.
Vol. XXIII. March-April-1925. No. 5.

திருவள்ளுவர் நூல்நய ஆராய்ச்சி.

[மதுரைத்தமிழ்ச்சங்கத்துக் கலாசாலையிற்பயின்று பாலபண்டிதர் என்ற பட்டம்பெற்றவரும், மேலைச்சிவபுரிச் சமரசசன்மார்க்கசபையைச் சார்ந்த கணேசசெந்தமிழ்க்கலாசாலைத் தலைமைத்தமிழாசிரியருமான ஸ்ரீமத். A. பூவராகபிள்ளையவர்கள் எழுதியது.]

திருவாளர் R. P. சேதுப்பிள்ளையவர்கள் தமது "திருவள்ளுவர் நூல்நயம்" என்னும் நூலின் ஏழாம்பகுதியிற் பரிமேலழகர்கொள்கைகள்சில பொருந்தாவெனக் கூறி மறுத்துள்ளார்கள். அவற்றுள், முதலாவது "புதல்வரைப்பெறுதல்" என்னும் ஏழாமதிகாரத்தின் தலைப்பெயர் "மக்கட்பேறு" என்றிருக்கவேண்டுமென்பது. அதற்கு அவர்கள் கூறும்காரணங்களை யாராய்வோம்.

I. நாயனார்குறளில் அமைந்துள்ள அதிகாரங்களின்பெயரை நன்கு ஆராய்ந்தால் அத்தலைப்பெயரில் வழங்கும் சொற்கள் அவ்வதிகாரத்திற் பலஇடங்களிற் பயின்றிருக்கக் காணலாம் என்றார்.

திருக்குறளின் முதலதிகாரம் "கடவுள் வாழ்த்து" என்பது. இத்தலைப்பெயரிலுள்ள சொற்கள் இவ்வதிகாரப் பத்துக்குறள்களில் எக்குறளில் வந்துள்ளன. கடவுள் + வாழ்த்து என்னும் இருமொழியும் வந்திலவேனும் அவற்றுள் ஒருமொழியேனும் வந்துளதோ? பிள்ளையவர்கள்கொள்கை முதலதிகாரத்திலேயே தவறுபட்டுவிட்டது. இஃதொன்றன்று. படைச்செருக்கு, தனிப்படர்மிகுதி, படர்மெலிந்திரங்கல் என்னும் அதிகாரங்களின் பெயர்களிலுள்ள சொற்கள் அவ்வதிகாரச்

செய்யுட்களில் யாண்டு வந்துள்ளன? ஒவ்வொருசெய்யுட்களிலேனும் காணப்பட்டில. இதனால் அவ்வதிகாரங்களின் தலைப்பெயர்களெல்லாம் மாறுபட்டுளவென்று கூறவேண்டுமன்றோ? "ஆள்வினையுடைமை" என்னுந் தலைப்பெயரிலுள்ள ஆள்வினை என்னுந் தொடர் ஓர்செய்யுளில்மட்டும் வந்துள்ளது. அது நியதியாகமாட்டாது. ஆதலால் "புதல்வரைப்பெறுதல்" என்னுந் தலைப்பெயர்ச்சொற்கள் அதிகாரக்குறள்களில் வாராமை காரணமாக அத்தலைப்பெயர் மாறுபட்டிருக்கவேண்டுமென்றுகூறுதல் பொருந்தாமை காண்க.

இனி மக்கள் என்னுஞ் சொல் ௭ட்டுக்குறளிலும் மகன் என்னுஞ் சொல் மற்றைய இரண்டுகுறளிலும் வழங்கக்காண்கின்றோம் என்றார்.

"தந்தைமகற்காற்றுப் நன்றி"
"தன்மகனைச்—சான்றோனெனக்கேட்டதாய்"
"மகன்தந்தைக்காற்றுமுதவி"

என மூன்றுகுறள்களில் மகன் என்னுஞ் சொல் வந்துளது. இவற்றுள் எக்குறளிலுள்ள சொல் நண்பருக்கு மாறுபட்டுத்தோன்றிற்றோ அறிகிலேன்.

II. வாழ்க்கைத்துணைநலத்தின் இறுதிச்செய்யுளால் இவ்வதிகாரத்திற்குத் தோற்றுவாய்செய்யப்பட்டமையால் அச்செய்யுளிலமைந்த "மக்கட்பேறு" என்னுஞ் சொற்றொடரே இவ்வதிகாரத்திற்குத் தலைப்பெயராக அமைந்திருக்கவேண்டுமென் றெண்ணுகின்றார்.

"இருமனப்பெண்டிரும்" என்னுங் குறளில் தோற்றுவாய்செய்தாங்கு அடுத்தஅதிகாரங்கள் அமைந்துள்ளன என்று பிள்ளையவர்களே கூறியுள்ளார்கள். அங்ஙனமாயின், கள்ளுண்ணாமையின் அடுத்த அதிகாரத்திற்குக் "கவறு" எனப் பெயர்கொடாது "சூது" எனப் பெயர்கொடுத்திருப்பதன்காரணம் யாதோ? அன்றியும், "பண்புடைமை" என்னு மதிகாரத் திறுதிக்குறளால் அடுத்தஅதிகாரத்திற்குத் தோற்றுவாய்செய்தனரென உரையாசிரியர்கூறியுள்ளார். ஆண்டு "நன்றியில் செல்வம்" என்னும் சொற்றொடரால் தோற்றுவாய்செய்யாது பொருளாற் றோற்றுவாய்செய்தனர். அங்ஙனமே இவ்வதிகாரத்திற்கும் பொருளாற் றோற்றுவாய்செய்தனரெனக்கோடல் பொருத்தமாமென்க. இனி இறுதிச் செய்யுளாற் றோற்றுவாய்செய்யவேண்டுமென்னும்நியதிதானுமின்றென்

பது கல்வியென்னு மதிகாரத்திற்கு அதன் முன்னதிகாரத் திறுதிச் செய்யுளிற் றேற்றுவாய்செய்யாது இடையிலுள்ளசெய்யுளிற் றேற்று வாய்செய்துள்ளமையான் உணரப்படும்.

இனி இத்தலைப்பெயர் மக்கட்பேறு என்றிருத்தலினும் புதல்வரைப் பெறுதல் என்றிருத்தலே சிறப்புடையதாகும். அஃது இப்பேறு ஈண்டெக்காரணத்தாற் கூறப்பட்டதென்பதை யாராயவே விளங்கும். பரிமேலழகா இல்வாழ்வான் இயல்பாக இறுக்கவேண்டிய தென்புலத் தார்கட னிறுத்தற்பொருட்டு, இப்பேற்றையடையவேண்டுமென்று கூறுகிறார். மணக்குடவருரையின்கண்ணும் (வ. உ. சிதம்பரம்பிள்ளை யவர்கள்பதிப்பு) இக்காரணத்தாலேயே இப்பேறு ஈண்டுக்கூறப்படுவ தாகக் காணப்படுகிறது. இவ்விஷயம் பண்டைத்தமிழ்நூல்களினும் அறியக்கிடக்கின்றது.

> "பேணித்—தென்புலவாழ்நர்க்கருங்கடனிறுக்கும்
> பொன்போற்புதல்வர்ப்பெறுதீரும்"

என்பது காண்க.

இவற்றாற் றென்புலத்தார்கடனிறுத்தற்பொருட்டே இப்பேறு ஒரு தலையாகவேண்டப்படுவதென்பது வெளிப்படையாகும். அங்ஙனமாயின், தென்புலத்தார்கடன் ஆண்மக்களைப்பெறுதலான் இறுத்தல் இயலுமோ? பெண்மக்களைப்பெறுதலான் இறுத்தல் இயலுமோ?. அன்றியும், திருவள்ளுவனார் மூன்றுகுறள்களான் ஆண்மக்கட்பேற்றை விதந்து கூறி ஒருகுறளிலேனும் பெண்மக்கட்பேற்றை விதந்துகூறாமையும் அறியற்பாலது.

151-ஆம் பக்கத்தில் இப்பேற்றான் உண்டாகு மகிழ்ச்சியின் மிகுதியை விளக்கும் பாக்களின்பொருளைத் தொகுத்துக்கூறி இம் மகிழ்ச்சி ஆண்மக்கட்பேற்றான்மட்டும் உண்டாகுமெனக் கருதுவதற்குச் சிறிதும் இடமில்லை என்றார். அஃதுண்மையே. ஆயினும், தாயுவகையை விதந்துகூறுமிடத்து ஆண்மக்கட்பேறே கூறப்பட்டுள்ளது. அதனாலேயே அக்குறளிலெல்லாம் மக்கள் என்னுஞ் சொல்லே வழங்கப் பட்டுள்ளது எனினும், இல்வாழ்வானாற் றன்கடன் தீர்தற்பொருட்டு ஒருதலையாக வேண்டப்படுவது ஆண்மக்கட்பேறேயாதலின் இவ்வதி

காரத்திற்குப் புதல்வரைப்பெறுதல் எனப் பெயர் கொடுக்கப்பட்டது எனக் கோடலால் வரும் இழுக் கென்னை ? பிள்ளையவர்கள் மக்கட்பேற் றான் எய்தும் பயன் மகிழ்ச்சியொன்றேயெனக் கொண்டனர்போலும்.

இனி, "பெறுமவற்றுள்" என்னுங் குறளிலுள்ள அறிவறிந்த என்பதற்குப் பரிமேலழகர்கூறிய உரை பொருந்தாதென்றார். ஆயின், இறந்தகாலத்தில் அமைந்துள்ள அத்தொடருக்கு இவர்களால் எங்ஙனம் உரைகூறப்பட்டுள்ளதெனஆராயின் 154-ஆம் பக்கத்து அத்தொடர் சிறிது விரித்து அப்படியேகூறப்பட்டுள்ளதேயொழியப் பொருளொன்றும் கூறப்படவில்லை. இனி அத்தொடருக்குப் பரிமேலழகர்கூறிய உரையை ஆராய்தல் நன்று. பிறந்தபின்னர் நூல் பல கற்றும் கேட்டும் அறியவேண்டுவன அறிதல் இயலுமேயொழியப் பிறக்கும்போதே அறிந்துகொண்டுபிறத்தல் இயலாது. அதனாலேயே உரையாசிரியர் அறிவறிந்த என்பதற்கு அறியவேண்டுவனவற்றை அறிதற்குரிய எனப் பொருள்கூறினார். ஈண்டுக்கூறிய உரிமையாவது ஆண்மக்களாகப்பிறத்தல் என்பது பிள்ளையவர்கள் கருத்து. அஃ துரையாசிரியர்கருத்தன்றாம். தெள்ளியராதற்கேதுவாகிய ஊழ்வினையுடைமையே ஈண்டுக் கூறிய உரிமையாகும். இனி அறியவேண்டியவற்றையறிதலாவது வீடுபேற்றிற்குரியநூல்களைக் கற்றும் கேட்டும் தெளிதலாகும். பெண்ணொழித்து நின்றதெனப் பரிமேலழகர்கூறியதும் இதுவேயாகும். தொல்காப்பிய முதற்சூத்திரஉரையில் நச்சினார்க்கினியர் "வீடுபேற்றிற்குரிய ஆண் மகனையுணர்த்துஞ்சிறப்பால் னகரம் பின்வைக்கப்பட்டது" எனக் கூறுதலுங் காண்க. கொண்டானைத் துறத்தல் கொண்டாட் கியலாதன்றே. வீடுபேறுகுறித்த கல்வியன்றிப் பொதுக்கல்வி இருவருக்குமுரியதே. என்னையெனின் ஆசிரியராற் றள்ளப்படாதனவும் நன்மைபயப்பனவுமாக வுள்ளன கொள்ளத்தக்கனவேயாதலின்.

158-159ம் பக்கங்களில் "எண்ணென்ப வேனை யெழுத்தென்ப" "கண்ணுடைய ரென்பவர் கற்றோர்" என்னுங் குறள்களை யெடுத்தோதி இவற்றான் நாயனார் கல்வியை இருபாலார்க்கும் பொதுவாகவேகூறிப்போந்தார் என்றார்.

அவ்வதிகாரப் பத்துக்குறள்களையும் ஒருவரும் படித்துப்பாரார் என்பது இவர்கருத்துப்போலும். "யாதானும் நாடாமால்" "ஒருமைக்

கட்டான்கற்ற கல்வி" என்னுங் குறள்களில் ஆண்பாலை விதந்து கூறியவர் பெண்பாலை ஒருகுறளிலேனும் கூருததென்னையோ? இதனுலும் கல்வி பொதுவாக இருபாலார்க்கும் உரித்தெனினும் சிறப்பாக ஆண்பாலார்க்கு உரித்தாதல் காண்க. அன்றியும், "சான்ருேனெனக்கேட்டதாய்" என்று ஆண்பாலைக்கூறியவர் சான்ருேளெனப் பெண்பாலையாவது சான்ருேரென இருபாலார்க்கும் பொதுவாகவாவது கூறிஞரில்லை. இதனுலும் விசேஷக் கல்வி ஆடவர்க்கேபொருந்துமென்பது நாயஞர்கருத்தாதல் வெளிப்படை.

"ஈன்றபொழுதின்" என்னுஞ் செய்யுளிலுள்ள "கேட்டதாய்" என்பதற்குப் பரிமேலழகர்கூறிய அகலஉரை மாறுபட்டதென்ருர்.

மக்கள்மாட்டுண்டாகும் இயல்பாய அன்பின்மேலீட்டால் அவர்கள் உயர்வு தாழ்வுகளைப் பகுத்துணர்தல் ஈன்ருட்கியலாதென்பது ஒருதலை. அன்றியும், அவள் கல்வியறிவுடையளாகவு மிருக்கலாம். இல்லாதவ ளாகவு மிருக்கலாம். உடையளாயினும் சாமான்யக்கல்வியுடையளா யிருத்தல் பெரும்பான்மைக்குப் பொருந்துவதன்றி விசேஷக்கல்வி யுடையளாயிருத்தல் பொருந்தாது. பேதைமை என்பது பெண்கட் கியற்கைக்குணம் என்பது மூதறிவாளர்கொள்கையாம். இவற்ருல் அவள் தன் மகனது சான்ருண்மையைத் தானே உணர்ந்துகோடல் இயலா தாகலின் பிறர்கூறக் கேட்டதாய் எனப் பரிமேலழகர்கூறியபொருள் மிகப்பொருத்தமா மென்க.

162-ம் பக்கம் பரிமேலழகர்கொள்கையைச் சிவப்பிரகாசமுனிவர் பெரியநாயகியம்மையார்துதியில் நயமாகக் கண்டித்தார் என்றும் பிற வாறுங் கூறியுள்ளார்.

அங்ஙன மோர் நயம்படக்கூறிஞரெனக் கோடலன்றிக் கண்டித்தா ரென அறிவுடையோர் கொள்ளார். அங்ஙனங்கொள்ளின் அம்முனிவரே நால்வர்நான்மணிமாலையில் "அறத்தாறிதுவென" என்னும் வெண்பா வால் திருவள்ளுவரையே மறுத்தாரெனக்கோடலால்வரும் இழுக் கியாது?

163-ம் பக்கம் "மனத்தின்கண் மாசின்மையேஅறம்" என வள்ளுவ ஞர்கூறியதைமேற்கொண்டு, பரிமேலழகர் "அறமாவது விதித்தனசெய்த லும் விலக்கியன ஒழிதலும்" எனக் கூறுவது பொருந்தாதென்ருர்.

இஃது, ஒரு நூலுட் கூறப்படும் பல்வகைப்பொருள்களுள், தன் மனம்விரும்பியதொன்றை ஒருவன் மேற்கொண்டு, இதுவே உண்மை, ஏனைய உண்மையெனல் பொருந்தாது எனக் கூறுவதையே யொக்கும். "அறவினை யாதெனிற் கொல்லாமை" என்பதை ஒருவன் மேற்கொண்டு, இதுவே அறவினை, பிறவெல்லாம் அறவினையாகா என்றும், இங்ஙனமே பிறனொருவன் "அறமெனப் பட்டதே யில்வாழ்க்கை" என்பதை மேற்கொண்டும் கூறின் இவை அறிஞர்களாற் கொள்ளத்தக்கனவாமோ? எல்லாப்பொருள்களையும் திரட்டியன்றோ கூறவேண்டும். "மனத்தின்கண் மாசின்மையே அறம்" என்பதை மேற்கொண்டு இதுவே அறமெனப் பிள்ளையவர்கள்கூறுவதும் மேற்கூறப்பட்டவற்றையே ஒக்குமென்க.

இதனால், பரிமேலழகர் யாவும் அடங்க விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலும் என்றதே பொருத்தமாவதன்றிப் பிள்ளையவர்கள் கூறியது பொருந்தாமை காண்க.

164-ம் பக்கம் "ஆசிரியர்வள்ளுவனார் தம் நூலின்கண் வழக்குத் தண்ட மென்னு மிவற்றை ஒருசிறிதும் அமைத்து எழுதவில்லை" என்றார்.

ஆசிரியர் அவற்றைத் தனிப்பால்களாகக் கூறவில்லையேயொழிய ஒருசிறிதும் கூறாமற்போகவில்லை.

"சமன்செய்து சீர்தூக்குங்கோல்போல்"
"சொற்கோட்டமில்லது செப்பம்"
"காட்சிக்கெளியன்"

என்னு மிவற்றால் வழக்குணரப்படும்.

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல்"

என்பதனாற் றண்ட முணரப்படும்.

"தக்காங்குநாடி"

என்னுங் குறளால் வழக்குத் தண்ட மிரண்டு முணரப்படும்.

இவ்விரண்டும் பெரும்பாலும் தேயங்கள்தோறும் காலங்கள்தோறும் மாறுபடக்கூடியனவே. பண்டைக்கால வழக்குத் தண்டங்களுட் பல இக்காலத்தோராற் கொள்ளப்படாமை யாவரு மறிவர். அதனாற் புலவர் அவ்விரண்டையும் தனிப்பகுதிகளாக் கூறாமைக்குப் பரிமேலழகர் கூறிய காரணம் மிகப் பொருத்தமுடைத்தாதல் காண்க.

168-ம் பக்கம் "சாதி குலம் பிறப் பென்னும் வேற்றுமையை மனதிற் கொள்ளாது..........................மயங்கவைத்தல் என்னுங் குற்றத்திற் கிடமாகும்" என்றார்.

சாதி குலம் பிறப் பென்னும் வேற்றுமையை வள்ளுவனார் கருதினரா? கருதிலரா என்பது ஆராயத்தக்கது. "மேற்பிறந்தா ராயினும் கல்லா தார் கீழ்ப்பிறந்தும், கற்றா ரனைத்திலர் பாடு" என்பது ஆசிரியர்வாக்காகும். இக்குறளின்கண் இயல்பாகவே மக்கட்கு மேற்பிறப்பு, கீழ்ப்பிறப்பென இரண்டுள்ளனவாகக் கூறப்பட்டுள்ளமை வெளிப்படை. அம் மேற் பிறப்புக் கீழ்ப்பிறப்புக்கள் யாவை? அவையே சாதியென்னும் சொல்லாற் கூறப்படுவனவெனிற் படும் இழுக் கென்னை? குலத்தைத் திருவள்ளுவர் "குலனுடையான்கண்ணேயுள" என்றும் "குலஞ்சுடும் கொள்கைபிழைப் பின்" என்றும் எடுத்துரைப்பதனாலேயே அவர் குலவேற்றுமைகருதி யுள்ளார் என்பது நன்குபுலனாகும்.

169-ஆம் பக்கம் "இவ்வாறு ஒழுக்கத்தாலும் தொழிலாலும் வேற் றுமை மக்களுக்குள் உண்டேயன்றிப் பிறப்பால் ஏற்றமும் தாழ்வும் இல்லை யென்பது நாயனாரது உறுதியானகொள்கையாகும்" என்றார்.

"மேற்பிறந்தாராயினும்" என்னுங் குறளே மக்கட்குப் பிறப்பால் உயர்வு தாழ்வு உண்டென நாயனார்கருதியுள்ளமை நன்கு உறுதிப்படுத் தும். அன்றியும், ஒழுக்கமுடைமை என்னும் அதிகாரத்தில் "ஒழுக்க முடைமைகுடிமை" அஃதாவது ஒழுக்கமுடையவன் உயர்குடிப்பிறப் பினனாவான் என்றார். எனவே இயல்பில் ஒருவன் தாழ்ந்தகுடியிற் பிறந்தவனாயினும் அவன் ஒழுக்கமுடையவனாயின் உயர்குடிப்பிறப்பின னாவான் என்பது தோன்றும். உயர்தலாவது தந்நிலையின்மேம்படுத லன்றே. இதனால் திருவள்ளுவர் குடிப்பிறப்பில் உயர்வு தாழ்வு கருதி யமை நன்கு வெளியாகின்றது.

170-ம் பக்கம். "மறப்பினும் ஒத்துக் கொளலாகும்" என்னுஞ் செய்யுளிலுள்ள "பார்ப்பான்" என்பதைக் காரணப்பெயராகக்கொண்டு நூல்களைப் பார்ப்பவன் என உரைகூறி அதனைச் சாதிப்பெயராகக் கொண்டது தவறென்கிறார்.

"வேளாப் பார்ப்பான் வாளரந் துமித்த"

"அன்னாய் வாழிவேண் டன்னை நம்மூர்ப்
பார்ப்பனக் குறுமகன் போலத் தாமும்" ய

"அன்னவை பிறவும் பார்ப்பார்க் குரிய"

"தோழி தாயே பார்ப்பான் பாங்கன"

என்றாற்போன்ற இடங்களிற் பார்ப்பான் என்பது சாதிப்பெயராகவந் துள்ளதன்றி எல்லோரையுமுணர்த்தத்தக்க காரணப்பெயராக யாண்டும் வரக்காண்கிலேன். அன்றியும், "பிறப்பொழுக்கம்" என்பது மக்கட் பிறப்பிற்குரிய ஒழுக்கம் என்றார். "மேற்பிறந்தாராயினும்" என்னுங் குறளில் "பிறப்பு" சாதியையுணர்த்திநின்றாற்போல ஈண்டும் "பிறப்பு" சாதியையுணர்த்திநின்றதெனக்கோடலாற் பிழை யாதோ? "ஒழுக்க முடைமைகுடிமை" எனக் குடிமை என்னுஞ் சொல்லாற் குலத்தை யுணர்த்திய ஆசிரியர் பிறப்பென்னுஞ் சொல்லாற் சாதியை யுணர்த்தினா ரெனக்கோடலே பொருத்தமாதல் காண்க.

173-ம் பக்கம் நூலாசிரியர்க்கு மதயானையை ஒப்பிட்டார். மதயானை நல்வழியறிந்துசெல்லாது விரும்பியாங்குச்சென்று தனக்கும் பிறர்க்குங் கேடுவிளைக்குமாதலின் அதனை நூலாசிரியர்க்கு உவமை கூறலாமோ? என்பதை ஆன்றோர் ஆராய்ந்து துணிவார்களாக.

174-ம் பக்கம் "கேட்டார்ப்பிணிக்கும்" என்னுஞ் செய்யுளுக்கு ஒருபுலவன் ஒருபொருளை யெடுத்துப் பேசுவதாகப் பொருள்கூறிப் பரிமேலழகர் உரை பொருத்தமுடைத்தன் றென்றார்.

பொருட்பால் அரசநீதியே கூறிச்செல்லினும் அதன்கட் கூறப்படும் விஷயங்கள் ஏற்குமளவில் ஏனையோர்க்கும் பொருந்துவதே. எனினும், அப்பகுதியிலுள்ள குறள்கட்கு அதிகாரத்தோடுபொருந்தப் பொருள் கொள்ளாமல் தம் விருப்பம்போற் பொருள்கோடல் பொருந்தாதாம். ஆகவே, "கேட்டார்ப் பிணிக்கும்" என்னுங் குறளை அஃது எவ்வதி காரத்து யாருக்காகக் கூறப்பட்டதென நன்கு ஆராயின் இலக்கண அமைதிக்குப் பொருந்தப் பரிமேலழகர்கொண்டபொருளே அதிகாரத் தோடு பொருந்திச் சிறப்புடையதாதல் நன்குபுலனும்.

175ம்-பக்கம் "கேட்டார்" என்பதைக் கேள் + தார் எனப் பிரித் தார். இது பொருந்தாதென்பது பகுதி விகுதி கற்கும் மாணாக்கர்க்கும் எளிதின் விளங்கும்.

176ம்-பக்கம் "இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு" என்னுஞ் செய்யுளிற் பன்மையொருமை மயக்கமின்மை அவருரையான் நன்குவிளங்கும்.

மதங்கசூளாமணி.

—❀❀❀❀—

ஒழிபியல்.

[கரு௦-ம் பக்கத் தொடர்ச்சி.]

௪. நான்காமதிகாரம், சுவை, குறிப்பு, சத்துவம், அவிநயம் என்னும் நான்குறுப்புணர்த்துத லுதலிற்று.

[உறுப்பியலினுட் சுவையை யாராயும்போது "ஆசிரியர் செயிற்றியனார் சுவையுணர்வையுஞ் சுவைப்பொருளையும் ஒன்றாக அடக்கிச் சுவை, குறிப்பு, சத்துவம் என மூன்றாக்குவர்; அவிநயத்தைத் தனித்துக் கூறுவர்" என்றாம். தசரூபநூலாசிரியர்கொள்கையும் அதுவேயாம். சூத்திரப்பொருளைத் தெளிவுபடுத்துவதற்கு யாம் உபயோகிக்கப் போகின்ற சில தமிழ்நூற்பதங்களையும் அவற்றோடு ஒத்தபொருளினவாகிய வடநூற்பதங்களையுந் தந்து அப்பாற் செல்வாம். சுவைப்பொருள் விபாவம்; குறிப்பு அநுபாவம்; மெய்ப்பாடு பாவம்; விறல் சத்துவம், சத்துவபாவம்; வழிநிலையவிநயம் வியபிசாரிபாவம்; சுவை நிலையவிநயம் ஸ்தாயிபாவம்; சுவை ரசம்.]

1. சுவைப்பொருளுங் குறிப்பும் விறலும் வழிநிலையவிநயமுங் காரணமாகச் சுவைநிலையவிநயந் தோன்ற அதனினின்றுஞ் சுவை பிறக்கும்.

2. எதனையுணர்வதனாற் சுவை யுணரப்படுகின்றதோ, அதுவே சுவைப்பொருள் (விபாவம்) எனப்படும். அது ஆலம்பனவிபாவம் (தலைவன் முதலிய நாடகபாத்திரர்), உத்தீபனவிபாவம் (காலம் களம் முதலியன) என இருவகைப்படும்.

3. சுவைப்பொருள் மனத்துப்பட்டவழி உள்ளத்து நிகழுங் குறிப்பு அநுபாவம். விபாவமும் அநுபாவமுங் காரணகாரியசம்பந்த முடையன; இவற்றைக் காரியப்படுத்துவதனால் இவற்றின்றன்மையை யுணரலாகும்.

4. உள்ளத்து நிகழ்ந்த இன்பத் துன்ப நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்த வாறே புறத்தார்க்குப் புலப்படுவதோராற்றான் வெளிப்படுவது மெய்ப்பாடு. குறிப்புக்கள் பிறந்த உள்ளத்தினின்று உடம்பின்கண் தானே தோன்றும் வேறுபாடு விறல் (சத்துவபாவம்).

5. அசைவற்றிருத்தல் (ஸ்தம்பம்), சோர்ந்துவிழுதல் பிர லயம்), மெய்ம்மயிர்சிலிர்த்தல் (ரோமாஞ்சம்), வேர்த்தல் (ஸ்வேதம்', நிறம்வேறுபடுதல் (வைவர்ணியம்), உடல் நடுங்குதல் வேபது), கண்ணீர்வார்தல் (அஸ்ரு), நாக்குளறுதல் (வைஸ்வர்யம்) என விறல் எண்வகைப்படும்.

6. சுவைநிலையவிநயத்தோடு உடன்றோன்றிக் கடலினுதித்த அலை கடலினுள்ளே மடிந்து மறைந்துபோவதுபோலச் சுவைநிலையவிநயத் தோடு வேறுபாடற்று மறைந்துபோகும் நீர்மையவாகிய வழிநிலையவி நயங்கள் முப்பத்துமூன்று உள.

நிர்வேத³க்³லாநிஶங்காஶ்ரமத்⁴ருதிஜட³தா
ஹர்ஷதை³ந்யௌக்³ர்யசிந்தாஸ்
த்ராஸேர்ஷ்யாமர்ஷக³ர்வா: ஸ்ம்ருதிமரணமதா³:
ஸுப்தநித்³ராவிபோ³தா⁴:
வ்ரீடா³பஸ்மாரமோஹா: ஸமதிரலஸதா
வேக³தர்காவஹித்தா²
வ்யாத்⁴யுந்மாதௌ³ விஷாதௌ³த்ஸுக்யசபலயுதா
ஸ்த்ரிம்ஶதே³தே த்ரயஶ்ச ||

7-31. [ஆசிரியர் விரித்துக்கூறிய இலக்கணத்தை இயன்றவரை தொகுத்துத்தருவாம்].

மெய்யுணர்வினாலோ, பொறாமை துன்ப முதலியவற்றினாலோ தன் னிலையழிந்து நெட்டுயிர்ப்பெறிந்து அயருறுதல் உயிர்ப்பு (நிர்வேதை); பசிதாகங்களாற் றுன்புற்று உடல்வாடித் தளர்ச்சியடைதல் சோர்வு (கிலானி); எதிர்வருந்துன்பத்தை நினைத்து நடுங்கி நாவறண்டு நிற்றல் கலக்கம் (சங்கை ; வழிநடைமுதலியவற்றால் உடல்வாடுதல் இளைப்பு (சிரமம்); அறிவு வலிமை முதலியவற்றையுடைமையினை லெழுகின்ற மனமகிழ்ச்சி உடைமை (திருதி); துன்பங்கண்டவழியும் துன்புதரு

செய்தியைக் கேட்டபொழுதும் வினையொழிந்தயர்தல் கையாறு (ஜடதை); இன்பந்தருபொருளை நினையுந்தோறும் உவகைக்கண்ணீரோடு இடையிட்டுத்தோன்றும் மனமகிழ்ச்சி இன்புறல் (ஹர்ஷம்); மலர்ந்தநோக்கமின்றி மையனுக்கம்படவரும் இரக்கம் இடுக்கண் (தைந்யம); பிறர்க்கு இன்னாசெய்து வெகுண்டெழுதல் நலிதல் (உக்கிரதை); கருதியதுபெறாமையினால் அதனை யெண்ணியெண்ணி மனம் புண்ணாதல் ஒருதலையுள்ளுதல் (சிந்தனை); இடியேறுபோல்வன வற்றால் வெருவிநிகழும் உள்ள நிகழ்ச்சி வெரூஉதல் (திராசம்); பிறர் செல்வங்கண்டவழி மனம்பொறாது அலைவுறுதல் பொறாமை (அசூயை); நிந்தைச்சொல் முதலியவற்றால் முனிவுறுதல் முனிதல் (அமர்ஷம்); குலப்பெருமை, கல்லாமை, இளமைமுதலியவற்றால் எய்தும் உள்ள மிகுதி மிகை (கர்வம்); முன்னறிந்தபொருளை விருப்புற்று உள்ளுதல் நினைதல் (ஸ்மிருதி); சாக்காடு (மரணம்) [வெளிப்படையாதலின் இதற்கு வரைவிலக்கணம் வேண்டியதில்லையென ஆசிரியர் கூறிச்செல்வார்]; கள்ளுண்டோனது நகையுங் களியாட்டும் களி (மதம்); நித்திரையில் வாய்வெருவுதல் கனவு (சுப்தம்); கண்மூடி உடல் நிமிர்த்தி அயர்ந்து உறங்குதல் துஞ்சல் (நித்திரை); கண்களைக் கசக்கிக் கொட்டாவிவிட்டுத் தூக்கத்திலிருந்து எழுதல் இன்றுயிலுணர்தல் (விபோதம்); தீய வொழுக்கம் முதலியவற்றால் நாணிய வுள்ளம் பிறர்க்கு வெளிப்பட நிகழும் நிகழ்ச்சி நாணுதல் (விரீடை); உணர்விழந்து வாயினின்றும் நுரைசேர்ந்து கூம்ப நடுக்குற்று நிலத்தில்விழுந்துபுரளுதல் ஞஞ்ஞை யுறுதல் (அபஸ்மாரம்); அச்சம் முதலியவற்றாற் கலக்கமுற்று ஒரு பொருண்மேல் இருபொருட்டன்மைகருதிவரும் மனந்தடுமாற்றம் ஐயம் (மோகம்); கலைநூல்முதலியவற்றால் ஐயந்திரிபறஉண்மையையுணர்ந்து பிறர்க்குரைத்தல் ஆராய்ச்சி (மதி); இளைப்பினாலோ வயிற்றிற் சூன் முதிர்ச்சி முதலிய ஏதுக்களாலோ தோன்றுகிற சோம்பு மடிமை (ஆலசியம்); அன்பும் அச்சமும் முதலாக உடம்பிற் புலப்படுமாற்றான் உள்ளநடுங்குதல் நடுக்கம் (ஆவேகம்); நிச்சயபுத்தியின்மையினாலே பன்முறையும் ஆலோசித்தல் கருதல் (தர்க்கம்); நாணுதல்முதலிய வற்றால் உடலிற்றோன்றியவேறுபாட்டைப் பிறர்காணாதபடிமறைத்தற்கு முயற்சித்தல் மறைத்தல் (அவகித்தை); வியாதியால்வருந்துதல் நோயுறல் (வியாதி); பைத்தியநோயினாற் காரணமின்றி அழுதல், சிரித்தல் வார்த்தையாடல் மயக்கம் (உன்மத்தம்); இடர், பொறாமை

முதலியவற்றால் மனம்புழுங்குதல் (விஷாதம்); காலதாமதமாவதை நினைத்துக் கலக்கமுற்று நெஞ்சுதுடித்து அவசரப்படுதல் பரபரப்பு (உற்சுகம்); காமம் வெஃகுளி மயக்கமுதலியவற்றால் மனந்தடுமாறல் சுழற்சி (சபலம்);

[வழிநிலையவிநயங்களைக் குறிப்பதற்கு யாம் மேலே வழங்கிய தமிழ்ப்பதங்களுட் பெரும்பாலன தொல்காப்பியம் மெய்ப்பாட்டியல் க -ம் சூத்திரத்து உரையினின்றும் எடுக்கப்பட்டன.]

["களித்தோ னவிநயங் கழறுங் காலை
யொளித்தவை யொளியா னுரைத்த லின்மையுங்
கவிழ்ந்துஞ் சோர்ந்துந் தாழ்ந்துந் தளர்ந்தும்
வீழ்ந்த சொல்லொடு மிழற்றிச் சாய்தலும்
களிகைக் கவாந்த கடைக்கணுக் குடைமையும்
பேரிசை யாளர் பேணினர் கொளலே;

தெய்வ முற்றோ னவிநயஞ் செப்பிற்
கைவிட் டெறிந்த கலக்க முடைமையும்
மடித்தெயிறு கௌவிய வாய்த்தொழி லுடைமையும்
துடித்த புருவமுந் துளங்கிய நிலையும்
செய்ய முகமுஞ் சேர்ந்த செருக்கும்
எய்து மென்ப வியல்புணர்ந் தோரே;

ஞஞ்ஞை யுற்றோ னவிநய நாடிற்
பன்மென் றிறுகிய நாவழி வுடைமையும்
நுரைசேர்ந்து கூம்பும வாயு நோக்கினர்க்
குரைப்பான் போல வுணர்வி லாமையும்
விழிப்போன் போல விழியா திருத்தலும்
விழுத்தக வுடைமையு மொழுக்கி லாமையும்
வயங்கிய திருமுக மழுங்கலும் பிறவும்
மேவிய தென்ப விளங்குமொழிப் புலவர்;

சிந்தையுடம் பட்டோ னவிநயந் தெரியின்
முந்தை யாயினு முணரா நிலைமையும்
பிடித்த கைம்மே லடைத்த கவினு
முடித்த லுறாத கரும நிலைமையும்
சொல்லுவது யாது முணரா நிலைமையும்
புல்லு மென்ப பொருந்துமொழிப் புலவர்;

இன்றுயி லுணர்ந்தோ னவிநய மியம்பி
லொன்றிய குறுங்கொட் டாவியு முயிர்ப்புந்
தூங்கிய முகமுந் துளங்கிய வுடம்பும்
ஓங்கிய திரிபு மொழிந்தவுங் கொளலே ;

சேத்தோ னவிநயஞ் செப்புங் காலை
யத்தக வச்சமு மழிப்பு மாக்கலுங்
கடித்த நிரைபபலின் வெடிததுப் பொடித்துப்
போந்ததுணி வுடைமையும் வலித்த வுறுபபும்
மெலிந்த வகடு மென்மைமிக வுடைமையும்
வெண்மணி தோன்றக் கருமணி கரத்தலு
முண்மையிற் புலவ ருணர்ந்த வாறே ;

மழைபெய்யப் பட்டோ னவிநயம் வகுக்கில்
இழிதக வுடைய வியல்புநனி யுடைமையும்
மெய்கூர் நடுக்கமும் பிணித்தலும் படாத்தை
மெய்பூண் டொடுக்கிய முகத்தொடு புணர்தலு
மொளிப்படு மனனி லுலறிய கண்ணும்
விளியினுந் துளியினு மடிந்தசெவி யுடைமையும்
கொடுகிவிட் டெறிந்த குளிர்மிக வுடைமையும்
நடுங்கு பல்லொலி யுடைமையு முடியக்
கனவுகண் டாற்று னெழுதலு முண்டே ;

பனித்தலைப் பட்டோ னவிநயம் பகரி
னடுக்க முடைமையு நகைபடு நிலைமையுஞ்
சொற்றளர்ந் திசைத்தலு மற்றமி லவதியும்
போர்வை விழைதலும் புந்திநோ வுடைமையும்
நீரும் விழியுஞ் சேறு முனிதலு
மின்னவை பிறவு மிசைந்தனர் கொளலே ;

உச்சிப் பொழுதின் வந்தோ னவிநயம்
எச்ச மின்றி யியம்புங் காலைச்
சொரியா நின்ற பெருந்துய ருழந்து
தெரியா நின்ற வுடம்பெரி யென்னச்
சிவந்த கண்ணு மயர்ந்த நோக்கமும்
பயந்த தென்ப பண்புணர்ந் தோரே ;

நாண முற்றோ னவிநய நாடின்
இறைஞ்சிய தலையும் மறைந்த செய்கையும்

வாடிய முகமுங் கோடிய வுடம்புங்
கெட்ட வொளியுங் கீழ்க்க ணோக்கமும்
ஒட்டின தென்ப வுணர்ந்திசி னோரே ;

வருத்த முற்றோ னவிநயம் வகுப்பிற்
பொருத்த மில்லாப் புன்க ணுடைமையுஞ்
சோர்ந்த யாக்கையுஞ் சோர்ந்த முடியுங்
கூர்ந்த வியர்வுங் குறும்பல் லுயர்வும்
வற்றிய வாயும் வணங்கிய வுறுப்பு
முற்ற தென்ப வுணர்ந்திசி னோரே ;

கண்ணோ வுற்றோனவிநயங் காட்டின்
நண்ணிய கண்ணீர்த் துளிவிரற் றெறித்தலும்
வளைந்தபுரு வத்தொடு வாடிய முகமும்
வெள்ளிடை நோக்கின் விழிதரு மச்சமுந்
தெள்ளிதிற் புலவர் தெளிந்தனர் கொளலே ;

தலைநோ வுற்றோ னவிநயஞ் சாற்றி
னிலைமை யின்றித் தலையாட் டுடைமையுங்
கோடிய விருக்கையுந் தளர்ந்த வேரொடு
பெருவிர லிடுக்கிய நுதலும் வருந்தி
யொடுங்கிய கண்ணொடு பிறவுந்
திருந்து மென்ப செந்நெறிப் புலவர் ;

அழற்றிறம் பட்டோ னவிநய முரைப்பி
னிழற்றிறம் வேண்டு நெறிமையின் விருப்பும்
அழலும் வெயிலுஞ் சுடரு மஞ்சலும்
நிழலு நீருஞ் சேறு முவத்தலும்
பனிநீ ருவப்பும் பாதிரித் தொடையலும்
நுனிவிர லீர மருநெறி யாக்கலும்
புக்க துன்பொடு புலர்ந்த யாக்கையுந்
தொக்க தென்ப துணிவறிந் தோரே ;

சீத முற்றோ னவிநயஞ் செப்பின்
ஓதிய பருவர லுள்ளமோ டுழத்தலும்
ஈர மாகிய போர்வை யுறுத்தலும்
ஆர வெயிலுழந் தழலும் வேண்டலும்
உரசியும் உரன்றும் உயிர்த்தும் உரைத்தலும்
தக்கன பிறவுஞ் சாற்றினர் புலவர் ;

வேப்பி னவிநயம் விரிக்குங் காலைத்
தப்பில் கடைப்பிடித் தன்மையுந் தாகமும்
எரியி னன்ன வெம்மையொ டியைவும்
வெருவரு மியக்கமும் வெம்பிய விழியும்
நீருண் வேட்கையு நிரம்பா வலியும்
ஓருங் காலை யுணர்ந்தனர் கொளலே;

கொஞ்சிய மொழியிற் கூரெயிறு மடித்தலும்
பஞ்சியின் வாயிற் பனிநுரை கூம்பலும்
தஞ்ச மாந்தர் தம்முக நோக்கியோ
ரின்சொ லியம்புவான் போலியம் பாமையும்
நஞ்சுண் டோன்ற னவிநய மென்க"

என, அடியார்க்குநல்லார் காட்டியவற்றையும் உறுப்பியல் சூ-ம் பிரிவி னுள் வந்தவற்றையும் ஈண்டு ஆராய்க.]

32-37. நிர்வேதை முதலிய வழிநிலையவிநயங்கள் தாமாக நிலை பெற்றுநிற்கும் ஆற்றலில்லாதனவாதலின், நிலைபெற்றுநின்று சுவையை யளிக்கும் சுவைநிலையவிநயங்களைச் சார்ந்து அவற்றுண் மறைந்துநிற்கு மியல்பின. வினைமொழியுங் காரகபதமுஞ் சேர்ந்து வாக்கியத்தொடரா மாறுபோலச் சுவைநிலையவிநயங்களோடு வழிநிலையவிநயங்களும் பிறவுஞ் சேர்ந்து நாட்டியச்சுவையைப் பிறப்பிக்கின்றன. இன்பச்சுவையவிநயம் (இரதி), வீரச்சுவையவிநயம் (உற்சாகம்), இழிப்புச்சுவையவிநயம் (ஜுகுப்ஸை), வெகுளிச்சுவையவிநயம் (குரோதம்), நகைச்சுவையவிநயம் (ஹாசம்), வியப்புச்சுவையவிநயம் (ஸ்மயம்), அச்சச்சுவையவிநயம் (பயம்), அவலச்சுவையவிநயம் (சோகம்) எனச் சுவைநிலையவிநயம் எண் வகைய. நடுவுநிலையவிநயத்தையுஞ் (சமநிலையவிநயத்தையுஞ்) சிலர் கொள்வார். இது நாடகவழக்கினுள் வருவதில்லை. உலகவாழ்க்கையில் மனதுக்கினியாளோடு (ரமணியோடு) கூடியிருக்குங்கால் உள்ளத்திற் சுவை தோற்றுவதுபோல நாடகச்சுவையை யனுபவிக்கும் ஆற்றலுடைய ரஸிகனுக்கு எண்வகைச்சுவைநிலையவிநயங்களுஞ் சுவையைப் பயப்பன.

38-40. [காவியார்த்தத்தை யுணர்ந்து நடிப்போர் தாமும் சுவையை யநுபவிப்பாரென்பது.]

41–42. காவியார்த்தத்தை யுணரும்போது மனத்தில் எழும் உணர்ச்சி நால்வகைத்து. அவையாவன: மலர்ச்சி, உயர்ச்சி, அசைவு, கலக்கம் என்பன. உவகை (சிருங்காரம்), பெருமிதம் (வீரம்), இளிவரல் (பீபற்சம்), வெகுளி (உருத்திரம்) என்னும் நான்குசுவையும் குறித்த நால்வகையுணர்ச்சிகளையும் முறையே தருவன. நகை (ஹாஸ்யம்), மருட்கை (அற்புதம்), அச்சம் (பயோற்கர்ஷம்), அவலம் (கருணை) என்னும் நான்கும் குறித்த நான்குஉணர்ச்சிகளையுமே முறையே தருவன வாதலின் உவகையினின்று நகையும், பெருமிதத்தினின்று மருட்கையும், இளிவரலினின்று அச்சமும், வெகுளியினின்று அவலமும் தோன்றினவென்பது பொருத்தமாகும்.

43-44. சுவைப்பொருள் (விபாவம்) முதலியன ஒன்றுந்தன்மை பற்றிச் சுவையும் (ரசமும்) சுவைநிலையவிநயமும் (ஸ்தாயிபாவமும்) ஒரேயிலக்கணத்தையுடையன. சந்திரிகை [இளந்தென்றல்] ஆதிய சுவைப்பொருளும், மெய்ம்மயிர்சிலிர்த்தல் (ரோமாஞ்சம்) ஆதிய சத்துவபாவமும், நிர்வேதை முதலிய வழிநிலையவிநயமும் காரணமாகத் தோன்றும் சுவைநிலையவிநயத்தினின்று சுவை பிறக்கும்.

45. மனத்துக்கு ரம்மியத்தைத்தரும் தேசம், கலை, காலம், வேஷம், போகம் என்பவற்றினின்று உவகை பிறக்கும். இளமைச் செவ்வி வாய்ந்த ஓர் ஆடவனுஞ் சேயிழையும் ஒருவர்மேலொருவர்வைத்த உளம்நிறைந்தகாதலை மெல்லென்ற குறிப்பினால் வெளிப்படுத்திக்காட்டு மிடத்து உவகை (சிருங்கார) ச் சுவை பிறக்கும்.

46. இதனை விரித்து நாட்டியக்கட்டுரையியற்றுமிடத்து எண் வகைவிரலும் எண்வகைச் சுவைநிலையவிநயமும், முப்பத்துமூன்றுவகை வழிநிலையவிநயமும் என்பனவற்றை நுண்ணுணர்வால் ஆராய்ந்து நெறி தவறு தமைக்கவேண்டும் மடிமை (ஆலசியம்), கலிதல் (உக்கிரதை), சாக்காடு (மரணம்), இளிவரல் (ஜுகுப்ஸை) என்னும் இவை ஒரே (கைசிகி) விருத்தியையுடைய உவகைச்சுவை நாட்டியக்கட்டுரையினுள் வருதல்கூடாது.

47. உள்ளப்புணர்ச்சி (அயோகம்), பிரிவு (விப்பிரயோகம்) கூட்டம் (சம்போகம்) என்னும் மூன்றும் நிலைக்களனாக உவகைச்சுவை

பிறக்கும். உளம்நிறைந்தகாதல ரிருவர் தெய்வச்செயலினாலோ, பிற ரிடைநிற்பதனாலோ கூட்டம் எய்தப்பெறாராய் ஒருவரையொருவர் நினைந்து உருகுவது உள்ளப்புணர்ச்சி (அயோகம்) ஆகும்.

48-52. இது பத்துநிலைகளையுடையது. [ஆசிரியர் தொல்காப் பியனார் ஒன்பது கூறினார். இவ்வாசிரியர் உடலிற் சுரநோயுறுதல் (சஞ்சுவரம்) என்னும் ஒன்று சேர்த்துப் பத்தாக்கினார்]

"வேட்கை யொருதலை யுள்ளுதன் மெலிதல்
ஆக்கஞ் செப்பல் நாணுவரை யிறத்தல்
நோக்குவ வெல்லா மவையே போறல்
மறத்தல் மயக்கஞ் சாக்கா டென்றச்
சிறப்புடை மரபினவை களவென மொழிப"

(தொல். பொருள். களவியல் கூ.)

காதலுக்குரியாரது எழில்நிறைந்த அவயவநலனைக் கண்ணினாற் கண்டோ, கனவினாற் கண்டோ, ஓவியத்திற் கண்டோ, பாணன் தோழி முதலினோர் சொல்லக்கேட்டோ காதலாற் கூட்டம்விழைதல் ஒருதலை வேட்கை (அபிலாஷம்), இடைவிடாது ஒருவரையொருவர் சிந்தித்தல் ஒருதலையுள்ளுதல் (சிந்தனை), உள்ளுங்காரணத்தால் வாட்டமடைதல் மெலிதல் (உத்வேகம்), காதலனது அல்லது காதலியது நற்குணங்களை யொவ்வொன்றாயெடுத்துக்கூறுவது ஆக்கஞ்செப்பல்(குணகதம்); ஆற்றுந் துணையும் நாணி அல்லாதவழி வரையிறந்து அரற்றுதல் நாணுவரை யிறத்தல் (பிரலாபம்), விளையாட்டு முதலியவற்றை மறந்து வினை யொழிந்தயர்தல் மறத்தல் ஜடதை), செய்திறனறியாது கையற்றுப் புள்ளும் மாவும் முதலியவற்றோடுகூறல் மயக்கம் (உன்மாதம்), மட லேறுதலும் வரைபாய்தலும்போல்வன கூறல் சாக்காடு (மரணம்).

[ஆசிரியர் அபிலாஷம், சிந்தனை யென்னும் இரண்டினுக்கும் இலக் கணங்கூறி ஏனையவற்றை யுய்த்துணருமாறு விடுத்தார். யாம் மேலே கூறிய இலக்கணங்கள் பொருளதிகாரவுரையினின்று மெடுக்கப்பட்டன. அயோகம் மெய்யுறுபுணர்ச்சியாகிய கூட்டம் இன்மை. கூட்டமின்மை யென மொழிபெயர்க்கின் உள்ளப்புணர்ச்சியும் விலக்குண்ணுமாதலானும் இது உள்ளப்புணர்ச்சிக்குரிய இலக்கணமனைத்தும் பெற்றுவராலானு மிதனை உள்ளப்புணர்ச்சியெனக் குறியீடுசெய்தது பொருந்துமாறறிக.]

53-65. [ஊடலும், கூடலும், பிரிவும் என்னும் இவற்றாலெழும் ஐந்திணையின் பத்தைப் பதின்மூன்றுசூத்திரங்களாற் கூறுகின்றார். தொல்காப்பியம், அகப்பொருள், நம்பியகப்பொருள், வீரசோழியம், இலக்கணவிளக்கம் என்னுந் தமிழ்நூல்களுள் இப்பொருள் விரிவாகக் கூறப்பட்டிருத்தலால் இச்சூத்திரங்களை மொழிபெயர்க்காது விடுகின்றாம்.]

66. [வீரம், நன்னடை, விநயம், மலர்ச்சி, வலிமையென்றின்னவற்றைச் சுவைப்பொருளாகவும், தயைக்குறிப்பு, போர்க்குறிப்பு, கொடைக்குறிப்பு என்றின்னவற்றைக் குறிப்பாகவும், ஆராய்ச்சி, மிகை, உடைமை, இன்புறல் என்றின்னவற்றை வழிநிலையவிநயமாகவுங் கொண்டு பெருமிதச்சுவை தோற்றும்.

67. இழிவுகாரணமாக இளிவரல் தோற்றும். கீடம், கிருமி, மலம், என்பு, மச்சையென்பன இளிவரற்சுவைப் பொருட்களாம்; துறந்தார்க்கு மகளிரது தனம் சகனம் முதலிய உறுப்புக்களும் இளிவரற்பொருள்களாம். மூக்கினைச்சுழித்தல்போன்ற குறிப்புக்களும் நடுக்கம், கலக்கம், நோயுறல்போன்ற வழிநிலையவிநயங்களும் இளிவரலைச்சார்ந்து நிற்பன.

68. கோபம், வெறுப்பு என்றின்னவற்றைச் சுவைப்பொருளாகவும்; பற்கடித்தல், உடனடுங்குதல், கண்சுழித்தல், வேர்த்தல், முகஞ் சிவத்தல், ஆயுதமெடுத்தல், தோள்தட்டுதல், பூமியையறைதல், வஞ்சினங்கூறல் என்னுமிவற்றைக் குறிப்பாகவும்; முனிதல், நினைதல், மனந்தடுமாறல், ஆற்றாமை, நலிதல், நடுக்கம் என்றின்னவற்றை வழிநிலையவிநயமாகவும் கொண்டு வெகுளிச்சுவை தோற்றும்.

69-71. நகைக்குறிப்போடுமருவிய உரை, செயல், வேடம் என்றின்னவற்றைப் பொருளாகக்கொண்டுதோன்றும் நகையானது முறுவல் (ஸ்மிதம்), புன்னகை (ஹஸிதம்), மெல்லச்சிரித்தல் (விஹஸிதம்),

அளவேசிரித்தல் (உபஹாசிதம்), பெருகச்சிரித்தல். (அபஹாசிதம்), ஆர்ப்பொடுசிரித்தல் (அதிஹாசிதம்) என அறுவகைப்பட்டு நித்திரை, மடிமை, இளைப்பு, களைப்பு, அயர்ச்சி யென்னும் வழிநிலைவிநயங்களோடு நடக்கும். அறுவகைநகையினுண் முதலிரண்டும் தலையாயினருக்கும், நடுவிரண்டும் இடையாயினருக்கும், இறுதியிரண்டும் கடையாயினருக்கு முரியன.

72-73. இயற்கைக்கு மாறுபட்டபொருட்களைச் சுவைப்பொருளாகவும்; அதிசயக்குறிப்பு, கண்ணீர்வார்தல், நாத்தடுமாறல் என்னு மிவற்றைக் குறிப்பாகவும்; இன்புறல், உடைமை, நடுக்கம் என்னு மிவற்றை வழிநிலைவிநயமாகவுங் கொண்டு மருட்கைச்சுவை நடக்கும்.

74. அஞ்சுதக்கனபொருளாகக் குரல்வேறுபடுதல், உடல் சோர்தல், வினையொழிந்துபார்தல் என்னு மிவை குறிப்பாக இடுக்கண், நடுக்கம், ஐயம், வெரூஉதல் எனனும் வழிநிலைவிநயங்களோடு அச்சச் சுவை தோற்றும்.

75-76. காதலித்தபொருளை யிழத்தலும் வேண்டாததனைப் பெறுதலும் சுவைப்பொருளாக; நெட்டுயிர்ப்பெறிதல், கண்ணீர்வார்தல், செயலற்றிருத்தல், அழுதல் குறிப்பாக, துஞ்சல், இடுக்கண், நோயுறல், சாக்காடு, மடிமை, நடுக்கம், வியர்த்தல், கையாறு, மயக்கம், ஒருதலையுள்ளுதல், என்னு மிவை வழிநிலைவிநயங்களாக அவலச்சுவை தோற்றும்.

77. நட்பு பக்தி என் றின்னவற்றையும் சூதாடல், வேட்டையாடல்போன்றவற்றையும் இந்நூலினுட் கூறிற்றேமல்லேமாயினும் அவை இன்புறல் பெருமிதம் என் றின்னவற்றுள் அடங்கிவருதல் காண்க.

78. பூஷணுதி சாம பேத தான தண்ட முதலியன, சந்தி யந்தரம், அலங்காரம் என் றின்னவற்றை அடங்கும்வழியறிந் தடக்கிக் கொள்க.

79. உவமைப்பொருளோ, இளிவரற்பொருளோ, உயர்ந்தபொருளோ, தாழ்ந்தபொருளோ, வன்கண்ணதோ, அருட்பாலதோ, பழங்கதையோ, கற்பனைக்கதையோ, எதனையும் மானிடர்க்குச் சுவைபயக்கும்படி நாட்டியக்கட்டுரையினுள் அமைத்துக் கூறுதல் கூடும்.

80. விஷ்ணுவின்புதல்வனாகிய தனஞ்சயன், முஞ்சமகிபதியோடு கலந்து வார்த்தையாடிய காரணத்தினா லடைந்த புத்திக்கூர்மையைக்கொண்டு, வித்துவான்களது உள்ளத்தைக்கவரும் (நாட்டியக்கட்டுரை) நூல்கள் பிறப்பதற்கு ஏதுவாகிய தசரூபம் என்னு மிந்நூலினை யியற்றி யுலகுக்கு அளித்தான்.

[தொடரும்]

விபுலாநந்தர்.

பிழைதிருத்தம்.

செந்தமிழில் இவ்விருபத்துமூன்றாந்தொகுதியின் மூன்றாம்பகுதியிலே ௬௨-ம் பக்கம் ௩-ம் வரியிற் கவிசக்கரவர்த்தி என்றிருப்பதைக் கவிச்சக்கரவர்த்தி என்றும், ௯௩-ம் பக்கம் ௬-ம் வரியில் தோன்றுக்கும் என்றிருப்பதைத் தோன்றுக்கும் என்றும், ௬௪-ம் பக்கம் ௧௬-ம் வரியில் தன்கோன் என்றிருப்பதைத் தங்கோன் என்றும், ௯௭-பக்கம் ௨௭-ம் வரியில் போறிற் என்றிருப்பதைப் போரிற் என்றும், ௧0௭-ம் பக்கம் ௧0-ம் வரியில் விஹிதவிலோசந என்றிருப்பதை விஹதவிலோசந என்றும், ௧௧௧-ம் பக்கம் ௨௬-ம் வரியில் பாரிபோகம்-மகளிர் இன்பம்; என்றிருப்பதைப் பரிபோகம்-மகளிர் இன்பம்; என்றும், நான்காம்பகுதியிலே ௧௨௨-ம் பக்கம் ௪-ம் வரியில் குறிக்கும். என்றிருப்பதைக் குறிக்கும்.) என்றும் ௯௭பக்கம் ௨௭-ம் வரியில் தனதுகருகம் என்றிருப்பதைத் தனதுகருமம் என்றும், ௧௨௩-ம் பக்கம் ௫-ம் வரியில் உட்புரிவுகள்' என்றிருப்பதை உட்பிரிவுகள் என்றும், ௧௫௨-ம் பக்கம் ௭-ம் வரியில் மதூரை என்றிருப்பதை மதுரை என்றும் திருத்திப் படித்துக் கொள்க.

பத்திராதிபர்.

கம்பராமாயண இன்கவித் திரட்டு.

(o)

[கரு0-ம் பக்கத் தொடர்ச்சி.]

229. "மூத்தவற் குரித்தரசெனும் முறைமையின் உலகம்
காத்த மன்னனில் இளையன் அன் றோ கடல் வண்ணன்?
ஏத்தும் நீள் முடி புனைவதற் கிசைந்தன னென்றால்,
மீத்த ரும் செல்வம் பரதனை விலக்குமா றெவனோ?"

இ-ள். அரசு மூத்தவனுக்கே உரியது என்று (நீ) கூறும் முறைப்படி உலகத்தைக் காத்த (தசரத) ராசனிலும் இராமன் இளையவனன்றோ? (அப்படியிருந்தும் அவன் தனக்கு மூத்த தசரதனிருக்கத் தான்) முடிசூடுதற்குச் சம்மதித்தானென்றால், (அவனிருக்க அவனுக்கு இளையவனான பரதன் அந்த அரசச்) செல்வத்தை (அடையாமல் அப்) பரதனை விலக்கும் முறை எப்படி (ப் பொருந்தும்)?

ஏத்தும் நீள் முடி - துதிக்கப்பெற்ற உயர்வுடைய கிரீடம். மீ (-மேல்-மேன்மை) தரும் செல்வம் - (அடைந்தவனுக்கு) மேன்மையை அளிக்கும் (அரசச்) செல்வம்.

230. "அறம் நி ரம்பிய அருள் உடை அரும் தவர்க் கேனும்,
பெறல் அ ரும் திருப் பெற்ற பின், சிந்தனை பிறிதாம்;
மறம் நி றைந் துமை வலியில ராயினும், மனத்தால்
இறல் உ றும்படி இயற்றுவர் இடையறு இன்னல்."

இ-ள். தரும (எண்ண) ம் நிறைந்த (எல்லா உயிர்களுக்கும் இரங்கும்) கருணையுடைய (மனத்தினராய்ச், செய்தற்கு) அரிய (தவத்தைச் செய்து முடித்த) முனிவர்களாயினும், அவர்களுக்கும், பெறுதற்கரிய செல்வத்தை (ப் பெற்றால், அதனைப் பெறு முன் இருந்த தரும சிந்தனையும் சீவகாருணியமும், அச்செல்வத்தை)ப் பெற்ற பின்பு (நீங்கி) மனம் வேறுபட்டுவிடும்; (அவர்கள் மனமே அவ்வாறானால், இவர்கள் மனம் எவ்வாறாமென்று கூறவேண்டியதில்லை; இவர்கள் தீர்க்கமாக) ஆலோசித்து உங்களைக் கொல்லுதலைத் துணியாராயினும் (நீங்களே

இவர்கள் செய்யும் துன்பத்தைப் பொறுக்கமாட்டாத) மனத்தால் (நான்றுகொள்ளல் நஞ்சுண்ணல் முதலியவகையால்) சாதலுறும்படி இடையறாத (தொடர்ச்சியான) துன்பங்களைச் செய்வார்கள்.

சிந்தனை - சிந்தித்தல்; சிந்திக்கும் மனத்தைக் குறித்தது. (ஊன்றி) நினைந்து உ(ம்)மை மறம் (— கொலை—கொல்லல்) வலியிலராயினும், (—துணியாராயினும்) என மாற்றுக. இறல்—இறுதல்—முடிதல்—சாதல்.

செல்வம்பெறுவார் 'அருந்தவரேனும் அவர்க்கு' என்பதை இணைத்துச் சுருக்கி 'அருந்தவர்க்கேனும்' என்றார். இவ்வாறே, எதிர்ப்பவன் 'ஈசனுரினும் அவனுக்கும்' என்பதைச் சுருக்கி 'ஈசற்காயினும்' என, "ஈசற் காயினும் ஈடழி வுற்றிறை-வாசிப்பாடறியாதமனத்தினன்" என்பதிற் கூறுதல் காண்க. (நிந்தனைப் படலம் ௨௫).

231. "புரியும் தன் மகன் அரசெனில், பூதலம் எல்லாம்
விரியும் சிந்தனைக் கோசலைக் குடைமையாம்; என்றால்,
பரியும் நின் குலப் புதல்வற்கும் உனக்கும் இப் பார்மேல்
உரிய தென்? அவள் உதவிய ஒரு பொரு ளல்லால்."

இ-ள். "தன் மகன் அரசு செய்வானானால், கோசலைக்குப் பூமி முழுதும் உடைமையாம். (அப்படி) ஆனால், அவள் (மனம் வந்து) கொடுக்கும் (கொடைவகையாற் கிடைக்கும்) ஒரே (வகைப்) பொரு ளல்லாமல், உன் மகனுக்கும உனக்கும் (சொந்தமாக) உரியது (அவள் உடைமையாகிய) இந்தப் பூமியிலே யாது? (ஒன்றுமில்லை.)

விரியும் சிந்தை - (மகிழ்ச்சியால் விம்மிப்) பூரிக்கும் மனம். பரியும் (அரசையிழந்து) வருந்தும். குலப்புதல்வன் - (அரசாளும்) குலத்தையுடைய மகன்; சிறந்த மகன. (குலம் - சிறப்பு.) 'தன் மகன் அரசு புரியுமெனில்' என்றும் 'அவள் உதவிய ஒருபொருளல்லால் உன் புதல்வற்கும் உனக்கும் உரியது இப்பார்மேல் என்' என்றும் மாற்றுக.

'உடைமையாம், உடைமையாமென்றால்' என்பதை 'உடைமையாமென்றால்' எனச் சுருக்கினார்.—இதுபோல, நிந்தனைப்படலம் ௬௬-ம் கவியில் 'கொன்று கோள் இழைத்தால், நீ நின் உயிர்விடுவாய், நீ நின் உயிர்விடில்' என்பதைக் 'கொன்று கோள் இழைத்தால் நீ நின் உயிர்விடில்' என்று குறுக்கியிருத்தல் காண்க.

232. " தூண்டும் இன்னலும் வறுமையும் தொடர்தரத், துயரால்
ஈண்டு வந்துனை இரப்பவர்க் கிருநிதி அவளை
வேண்டி ஈதியோ? வெள்குதி யோ?விம்மல் நோயால்
மாண்டு போதியோ? மறுத்தியோ? எங்ஙனம் வாழ்தி? "

இ - ள். (தம்மை உண்பாற் பொருள்வேண்டிச் செல்லும்படி) செலுத்தும் தரித்திரமும் (அதனோடு சமவாயசம்பந்தமுடையதாய் உடன்நிகழும்) துன்பமும் (நீங்காமல் தள்ளிக்கொண்டு பின்தொடர (அவ்வாறு தள்ளப்படுதலால் உண்டாம் புதுத்) துன்பத்தோடு இங்கே வந்து (உங் பொருளை நீகொடுக்கும்நிலைமையிலிருந்த) உன்னை (இதற்கு முன் யாசித்ததுபோல) யாசிப்பவர்க்கு (நீ கொடுக்கக் கருதும்)பொருளை (க் கோசலையை) இரந்து (வாங்கிக்) கொடுப்பாயோ? (அவள் உன் மாற்றவளாதலால் அவள்பால் இரக்க) வெட்கப் படுவாயோ? (இரக்கும் வெட்கம் ஒருபுறம் வருத்த, இரந்தாருக் கீயமாட்டா வருத்தம் ஒருபுறம் வருத்த, உண்டாகின்ற, இருதலைக் கொள்ளி எறும்பினது துன்பம்போன்ற) துன்பத்தாற் செத்துப்போவாயோ? ('சாதலின் இன்னாத தில்லை; இனிததூஉம்—ஈதல் இயையாக் கடை' ஆதலால் இறத்தலினும் கொடியதான, இரந்தார்க்கு இல்லை யென்னும்) மறுத்தலைச் செய்வாயோ? (மறுக்குமாறன்றி, வாழுமாறில்லை யாதலால்,) எவ்வாறு வாழ்வாய்? (இறந்தே போவாய்!)

தூண்டுதல்—செலுத்தல் இன்னல், துயர், விம்மல், நோய், இன்னாதது ஆகியவை துன்பமென்னும் ஒருபொருள் குறித்த பல சொற்கள். 'வறுமையும் இன்னலும்' எனற்பாலவை செய்யுளாதலால் 'இன்னலும் வறுமையும்' எனப்பட்டன. துயரால்—துயரோடு. இதுபோலப் 'பெண்டகையோடு' என்பது 'பெண்டகையால்' எனப் 'பண்டறியேன்' என்ற குறளில் வருதல் காண்க. இருநிதி - பெரும் பொருள். வேண்டல்-இரத்தல்; ('ஏற்றலே குறைகோள் பின்சென் றிறத்தலே வேண்ட லும்பேர்' சூடாமணிநிகண்டு). வெள்குதல்—நாணுதல்.

இரப்பார் பலராய்ப் பலகாலத்து வருவராதலால், அவர்க்கெல்லாம் கொடுத்தற்குத் திரளான திரவியம் வேண்டுமென்பதுகருதி 'இருநிதி' என்றாள்.

233. "சிந்தை செய்கையில் திகைத்தனை: இனிச் சில நாளில்
தந்தம் இன்மையும் எளிமையும் நிற்கொண்டு தவிர்க்க,
உந்தை உன்னை உன் கிளைஞர் மற் றுன்குலத் துள்ளோர்
வந்து காண்பதுன் மாற்றவள் செல்வமோ? மதியாய்".

இ-ள். (இராமன் முடிசூடுதல்சம்பந்தமாக, நீ கருதியதும் தவறு; கருதியபடி செய்யத்துணிந்ததும் தவறு: ஆதலால்) சிந்தித்த லிலும் திகைத்துவிட்டாய்; செய்தலிலும் திகைத்துவிட்டாய்: (அந்நிய ரான இரவலர் கிடக்க; உன்னவரான) உன்தந்தை உன்தாய் (உன் சகோதரர் முதலிய) உன் குடிப்பிறந்தார் உன் உறவினர் (ஆனவர்கள்) தங்கள் தங்கள் இல்லாமையையும் (இல்லாமையால் ஏற்படும்) ஏழைமை யையும் உன்னைக்கொண்டு ஒழிக்க இன்னும் சில நாளில் வந்து (உன்னைக் காண்பார்கள். அப்படிக்) காண்பது (உன் செல்வத்தைக் கருதியோ,) உன் மாற்றாள் (கோசலை) செல்வத்தைக் கருதியோ? ஆலோசிப்பாயாக.

சிந்தை-எண்ணம். இன்மை-இல்லாமை. எளிமை-ஏழைமை; தாழ்வு. உந்தை-உன் தந்தை. உன்னை-உன் அன்னை - உன்தாய். கிளைஞர்-உறவி னர். குலம்-குடி. மதித்தல்-கருதுதல்.

இரப்பவர் உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவும் உடையும் முதலியவை இன்றியிருத்தலைக் குறிக்க, அவர்திறத்தில் 'வறுமையும் இன்னலும்' என்றவள், எல்லா இன்றியமையாப்பொருள்களும் ஏதேட்ட மாக உடையவராகிய கைகேயியின் இராச குடும்பத்தினரும் உறவினரும் சௌகரியத்துக்கு வேண்டிய வாகனங்கள்போன்ற சில பொருள்கள் இல்லாமையையும் அதனால் அவர்க்கு நேரும் தாழ்வையுங் குறிக்க, அவர் திறத்தில் 'வறுமையும் இன்மையும்' என்னாது 'இன்மையும் எளிமையும்' என்றாள்.

இரவலரெல்லாரும் வேண்டுவன ஒன்றுபோல ஊண் உடை முதலிய சில பொதுப்பொருள்களாயிருக்கக் கைகேயியின் தந்தை முதலியோர் விரும்புவன ஒன்றுபோலில்லாமல், சிலர்க்கு உள்ள நாட்டோடு பக்கநாடு சேர்த்தல் சிலர்க்கு அதிகப்படை சேர்த்தல் முதலிய பல திறப்பட்ட பொருள்களாயிருத்தல் குறிக்க, யாசகர் திறத்தில் எல்லாருக்கும் பொதுவாக 'வறுமை' என்றாள்; கைகேயின் உறவினர்

திறத்தில் பிரத்தியேகம் பிரத்தியேகமான 'தம் தம் இன்மை' என்றாள். அவர்கள் வந்து இரப்பதாகவும் இவர்கள் வந்து காண்பதாகவும் கூறியதும் கவனிக்கத்தக்கது.

234. "கெடுத்தொ ழிந்தனை உனக்கரும் புதல்வனை!க் கிளர்நீர்
உடுத்த பாரகம் உடையவன் ஒரு மகற் கெனவே
கொடுத்த போர சவன் குலக் கோ மைந்தர் தமக்கும்
அடுத்த தம்பிக்கும் ஆம்; பிறர்க் காகுமோ?" என்றாள்.

இ-ள். "உனது அருமைக்குமாரனை (அரசடைய வொட்டாது தடுத்துக்) கெடுத்துவிட்டாய்! தசரதராசன் (தன் மக்கள் நால்வருள் இராமனாகிய) ஒரு மகனுக்கென்றே கொடுத்த அரசு, (அந்த மகனுக்கும்) அவன் மக்களுக்கும் (அவனை இடைவிடாமல்) அடுத்திருக்கும் (இலக்குமணனாகிய) தம்பிக்கும் (பிரயோசனம்) ஆகும்; (பரதன் முதலிய) அந்நியர்க்கு(ப் பிரயோசனம்) ஆகுமோ?" என்றாள்.

கிளர்தல் - பிரகாசித்தல். நீர் - கடல். பாரகம் - பூமி. கோ - அரசன். கோ மைந்தர் - இராசகுமாரர்.

[இவ்வாறு மந்தரை கூறியதைக் கேட்ட கைகேயி மனம் மாறுதலடைந்தது.]

235. அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய அறமும்
துரக்க நல் அருள் துறந்தனள் தூ மொழி மட மான்
இரக்கம் இன்மை அன் றோ இன்றிவ் உலகங்கள் இராமன்
பரக்கும் தொல் புகழ் அமுதினைப் பருகுகின் றதுவே!

இ-ள். (இராவணாதி) இராக்கதர்கள் (செய்த) தீவினையும் (அவர் அல்லாதவர்கள் செய்த நல்வினையும் தூண்டக், கைகேயி (தனக்கு இயல்பாக உள்ள) இரக்கத்தைக் கைவிட்டாள். அவள் இரங்காமையன்றோ (முற்காலத்தும்) தற்காலத்தும் (பிற்காலத்தும். எல்லா உலகத்தினரும் இராமனது உலகெல்லாம்) பரவிய பழம்புகழ் (கூறுவதாகிய இராமாயண) அமுதத்தை (ச் செவிவாயால் மனவயிறுநிரம்ப) உண்ணுவதுக்குக்காரணம்!

துரத்தல் - தூண்டுதல். தூ - தூய்மை. மடம் - இளமை. தொல் - பழைய. 'உலகங்கள்' உலகங்களில் உள்ளாரையும் 'பருகுகின்றது' பருகுகின்றதுக்குக் காரணத்தையும் குறித்தன.

இக் கவி, தெய்வம் சில சமயங்களில் தீமையினின்று நன்மை விளைவிப்பதைத் தெரிவிப்பதாய், மிக வெறுக்கப்பட்டபொருள் மிக விரும்பப் பெற்ற பொருளுக்குக் காரணமாயிருந்ததை விளக்குவதாய், உண்மையை உள்ளவாறே உரைத்து உவப்பும் வியப்பும் ஒருங்கே நிகழ்விப்பதாய்ச் சுவையுணர்வார் உள்ளத்தைச் சூறையாடித் தொண்டுகொள்வதாய் உள்ள நனியினிய அதி அற்புத கவியாம்.

[அவ்வாறு மனம் மாறி இரக்கம் நீங்கிய கைகேயி, மந்தரையை வாஞ்சித்து நோக்கி "என்மீது அன்புள்ளாய்! என் மகனுக்கும் இதம் செய்வாளாயிருக்கின்றாய்! அவன் மகுடம்வனையும்வகையை வழங்குவாயாக" என்றாள். எனவே, மந்தரை மகிழ்ந்து, "என் தோழி சமர்த்தி! என் துணைவி சமர்த்தி!" என்று கைகேயியைப் புகழ்ந்து, பின்னும் தன் பெருமகிழ்ச்சியை உணர்த்துவாளாய், அவள் பாதங்களில் விழுந்து, பணிந்துகொண்டு "என்சொற்படி நிற்பையேல், உலகமுழுதும் உன் மகனுக்கே உரிமையாக்குவேன். நான் சொல்வதைக் கவனித்துக்கேள். நீ, தசரத சக்கரவர்த்தி சம்பராசுரனோடு சமர்செய்து சயிக்குந்தருணத்திற் சம்பவித்த சங்கடத்தைத் தவிர்த்துச் சயமடையும்படி சகாயம் செய்தசமயத்தில், சக்கரவர்த்தி தந்த வரங்க ளிரண்டையும் அப்போது கொள்ளாது வைத்திருந்தாய். அவ்வரங்களை இப்போது கொள். அவற்றில் ஒன்றினால் அரசைக் கைப்பற்று. மற்றொன்றினால் இராமனை ஈரேழுவருடம் வனத்தில் வசிக்கச்செய். இதுவே (அரசைப் பெறுதற்கும் பெற்றதை இராமன் கவராமற் காத்தற்கும்) உபாயம்" என்றாள். உடனே கைகேயி, அவளை, உள்ளே உள்ள இருவர் உயிர்களும் நெருங்கிப் பொருந்தி ஒன்றாகச்செய்வாள்போல, இறுகத்தழுவி, வரிசை வரிசையான மணிமாலைகளையும் திரள்திரளான திரவியக் குவியல்களையும் வழங்கி "உலகமுழுவதையும் என் ஒரு மகனுக்கு உதவினாய். அவனுக்கு இன்றளவும் நான் தாய்; இனித் தாய் நீயே; பரதன் தாய் நான்; அரசன் தாய் நீ. எங்களுக்கு இதத்தை உரைத்தாய். பரதன் நாட்டிலே முடிசூடுதலும் இராமன் காட்டிலே குடியேறுதலும் ஆகச்செய்வேன்; அன்றேல், அரசன்முன் என் ஆவியைப் போகச்செய்வேன். நீ செல்வாயாக" என்றாள். [தொடரும்]

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

ஸ்ரீ:

கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி.

[ககச-ம் பக்கத் தொடர்ச்சி.]

(11) கருணாகரன்மரபு.

"இறைமொ ழிந்தளவி லெழுக லிங்கமவை
யெறிவ லென்றுகழ றெழுதனன்
மறைமொ ழிந்தபடி மரபின் வந்தகுல
திலகன் வண்டைநக ரரசனே." (328)

இத்தாழிசையுள் 'மறைமொழிந்தபடி மரபின்வந்த குலதிலகன்' என்பது கவியின்கருத்தமைதிபெற்ற தொடரன்று. 'வேதமொழிந்தபடி மரபில்வந்த குலதிலகன்' (கருணாகரன்)என்று,பொருணயமில்லாததொடரொன்றைப் புலவர்பெருமான் பாடினராகாமை, ஊன்றி நோக்குவார்க்குப் புலனும். அதனால், இப்பாடத்துள் ஒரு தவறுண்டென்பது பெறப்படும். அத்தவறாவது பதி எனற்பாலது படி என்று பிறழ்வுற்றதே என்க. மறைமொழிந்த பதியாவான் பிரமன். கருணாகரன் பல்லவமரபினனென்பது சயங்கொண்டார்வாக்கால் நன்கறிந்ததே. இப்பல்லவவமிசம் பிரமனை ஆதியாகக்கொண்டது என்பதைப் பல்லவசாஸனங்கள் பலவற்றாலுந் தெளியலாம். "ஸ்வஸ்திஸ்ரீ இவ்வகையே ப்ரஹ்மன் ஆதியாக வாரா நின்ற பல்லவவமிசத்துள் பரமேசுவரப்போத்தரையன" என்று பழைய தொருசாஸனம் கூறுதலும் காண்க (S. I. I. IV, P. 10). ஒருவர்வாய்க் கேட்டு ஏடெழுதும்போது, பதிக்கும் படிக்கும் உள்ள ஒலிவேற்றுமை புலனாகாமையால் நேர்ந்த பாடப்பிறழ்வாகவே இது கருதற்குரியது.

(12) தலைமைச் சேனாபதி.

அபயனேவலாற் கலிங்கப்போர்க்கு ஆயத்தமாகிய தலைமைச்சேனாபதியும் உதவிச்சேனாபதிகளும் தத்தங் களிறுகளில் ஏறியவாற்றைச் சயங்கொண்டார் மூன்றுபாடல்களாற் சிறப்பிக்கின்றார். அவற்றுள், தலைமைச்சேனாபதியான கருணாகரத்தொண்டைமானைப்பற்றிய தாழிசை புதுப்பதிப்பிற் காணப்படுமாறு:—

"தண்ணார் மலர்சேர் திரடோ ளபயன்
தானேவிய சேனை தனக்கடையக்
கண்ணாகிய சோழ விசக்கரமாங்
கருணாகரன் வாரண மேற்கொளவே" (350)

இதனுள் 'சோழன சக்கிரமாம்' என்பது பழையபாடம். அது, 'சோழ னிசக்கரமாம்' என்று இப்போது திருத்தப்பெற்றும்—"சேனை முழுமைக்குங் கண்போன்ற (அபயன்மகன்) விக்கிரமசோழனும், படைத் தலைவனுக்கும் படைக்கும் உண்மையான கைபோன்ற கருணாகரனுங் களிற்றை மேற்கொள்ள" என்று பொருளெழுதப்பட்டுமுள்ளது.

அபயன்மகனான விக்கிரமசோழன் இளவயதிலே கலிங்கத்தின்மேற் படையெடுத்துச்சென்று, ஆங்குநடந்த போரொன்றில் வெற்றிபெற்றவனென்பது உண்மையே. ஆயின், அது, சயங்கொண்டார் பாடிய கலிங்கப்போர்தான் என்று துணிய இடமில்லை. மற்று அப்போர், தெலுங்கவீமன் என்ற கலிங்கராசனுடன் நடத்தியதென்பது,

"தெலுங்க வீமன் விலங்கன்மிசை யேறவும்
கலிங்க பூமியைக் கனலெரி பருகவும்
ஐம்படைப் பருவத்து வெம்படை தாங்கி
வேங்கை மண்டலத் தாங்கினி திருந்து
வடதிசை யடிப்படுத் தருளி"

எனவரும் அவன் மெய்க்கீர்த்தியாற் றெளிவாம். கூத்தரும் விக்கிரம சோழனுலாவில்—

"ஏனைக் கலிங்கங்க ளேழினையும் போய்க்கொண்ட
தானைத் தியாக சமுத்திரமே"

என்று பாடியதும் இக்கலிங்கவெற்றியாகவே கருதத்தகும். அபயன் நடப்பித்த கலிங்கப்போர் விக்கிரமனடத்திய அப்போரினும் வேறானதென்பது, சாஸனபரிசோதகர்க்கும் ஒப்பமுடிந்ததே. இனி, சயங்கொண்டார் பாடிய கலிங்கப்போர்க்கு விக்கிரமனுஞ் சென்றிருந்தவனாயின், உடன்சென்ற தலைவர்களின்பெயர்களைக்குறிப்பிட்டுத் தனித்தனித் தாழிசையாற் பாடும் அப்புலவர், இளவரசனென்பது விளங்க அவ்விக்

கிரமன்பெயரையுங் குறிப்பிட்டுச் சிறப்பித்திருப்பானன்றோ? ஒரு தாழிசையிற் கருணாகரனுடன் சேரவைத்தும், பெயர்விளக்காமலும், இளவரசனான அவனைச் 'சோழன்' என்றும் கூறினர் என்பது பொருந்துவதாகவில்லை. அன்றியும், 'சோழ னிசக்கரமாம்' என்ற பாடத்துக்கு—'அபயனுக்கும் படைக்கும் உண்மையான கைபோன்ற கருணாகரன்' என்ற பொருள் தரப்பட்டுளது. இப்பொருள் கொள்ளின் அவ்வபயன் கொண்ட கரம், போலிக்கரம் என்பதுபட்டு, அவன தியற்கை வலியைக் குறைவுபடுத்துவதாகவே முடியும்.

"இராமன் தோள்வலி கூறுவோர்க்கே" (கம்பரா)

......................................—"மீண்டமரர்,
தாளிரண்டு நோவத் தனித்தனியே யோடியநாள்
தோளிரண்டு மன்றே துணை" (நளவெண்.)

"ஆளரி யேறு போல்வார்,...............
தோளிணை துணையே யாகப் போயினார் (பெரியபுரா.)

என்றாற்போல, வீரரது புசபலத்தை மாசறச் சிறப்பித்தலே பண்டை வழக்காகும். இவற்றால், புதுப்பாடத்தாற் பொருட்சிறப்பொன்றும் பெறப்படாமை காண்க.

[கருணாகரனைச் சக்கரமாக உருவகிக்கை.]

இனி இப்பதிப்பில் ஒதுக்கப்பட்ட 'சோழன சக்கிரமாங் கருணாகரன்' என்ற பழையபாடத்தை ஆராயுமிடத்து, அதுவே பொருட்பொலிவுகொண்டு திகழ்கின்றது. அதனைச் சிறிது விளக்குவேன். 'சக்கிரமாம்' என்ற பாடத்தின்படி, தலைமைச்சேனாபதியை இத்தாழிசையும், உபசேனாபதிகளை அடுத்துவருந் தாழிசைகளிரண்டும் குறிப்பனவாக அமைகின்றன. 'சேனை முழுதுக்குங் கண்ணானவனும், சோழ (அபய) னது சக்காயுதம்போன்றவனுமாகிய கருணாகரன்' என்பது இதன் பொழிப்பாம். மேலெல்லாந் திருமாலின் அவதாரமாக அபயனைப் புகழ்ந்துவந்ததற்கேற்பப் போர்க்கெழுந்த அவன்படைத்தலைவனை அவனது சக்கரப்படையாகக் கவி உருவகிக்கலாயினர். கலிங்கப்போர்க்குத் தானே படையெடுத்துச்சென்றவனல்லனாயினும் (458)— பகையறுத்தற்குத் திருமால் தன் சக்கரத்தாழ்வானை ஏவுமாறுபோல அவனமிசமாகிய அபயனும், தன் சக்கரமாகிய கருணாகரத்தொண்டைமானை

ஏவினன் என்றார்; என்றதன்கருத்து—துணைக்காரணமான கருணாகரச் சக்கரத்தின் செய்கை யாவும் அதனைத் திரித்துவிட்ட நிமித்தகாரணனாகிய அபயனுடையனவே என்பதாம். திருமாலாக உருவகித்து அபயனது அவதாரங்கூறியவிடத்தே, சயங்கொண்டார்—

“ சக்கர முதற்படையொ ரைந்துமுத னாளே
தன்னுடைய வானவத னாலவை நமக்குத்
திக்குவிச யத்தின்வரு மென்றவை பயிற்றிச்
செங்கைமலர் நொந்தில சுமந்தில தனக்கே ” (234)

என்பதனால், தெய்வாமிசமாகிய அவன் ஐம்படைதரியாமைக்குக் காரணங் குறிப்பிட்டார்; குறிப்பிட்டதற்கேற்ப—

“ கண்டு காணுன் படைவலி நீயும் அத்
தண்டு கொண்டவன் சக்கரம் வந்ததே ” (375)

என்று—கலிங்கராசனுக்கு அவன் மந்திரி கருணாகரன் படையெடுத்து வருவதைக் கூறுமிடத்தும் அவனை அபயனசக்கிரமாகவே உருவகித்துப் போந்தமை காணலாம். ஆகவே, ‘சோழன சக்கிரமாங்*கருணாகரன்’ என்பதே, சயங்கொண்டார் கருதியமைத்த தொடர் என்பது ஐயமின்றிப் போதரும். இனி, அபயனை —“திரிபுவனசக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்கசோழதேவர்” என்று கூறுவது அவன்காலவழக்காதலின், அச் சக்கரவர்த்தியின் சக்கிரமாகக் கருணாகரனைக் கவி கூறினர் என்றலும் பொருந்தும். சந்தநோக்கி, ‘சோழன சக்கரம்’ என, ஆறுவதன் பன்மையுருபு ஒருமைக்கண் மயங்கியது. ‘புல்லியவேங்கடம்’ (=புல்லி என்பானது வேங்கடம்) எனப் புறநானூற்றினும் (385), ‘தப்பினபிள்ளைகளைத் தனமிகு சோதிபுக’ எனப் பெரியாழ்வார்திருமொழியினும் (1, 5, 7), ‘எனகருத்திடை’ எனக் கந்தபுராணத்தும் (மேருப். 56) முன்னோரும் பின்னோரும் சிறுபான்மை இம்மயக்கம்படக் கூறுதலுங் கண்டுகொள்க. இனி, ‘கண்ணாகிய கோனியல் சக்கிரனெங்—கருணாகரன்’ என்ற பாடம் ‘மியூசியம்’ புத்தகசாலைப் பாணிப்பிரதியொன்றிற் காணப்படுதலால் அதுவும் இயைத்துக்கொள்ளற்பாலது.

* சக்கிரமெனினும் சக்கரமெனினும் பொருந்தும்.

(13) உபசேனாபதிகள்.

"தொண்டையர்க் கரசு முன்வருஞ் சுரபி
துங்க வெள்விடை யுயர்த்தகோன்
வண்டை யர்க்கரசு பல்ல வர்க்கரசு
மால்க ளிற்றின்மிசை கொள்ளவே" (351)

"வாசி கொண்டரசர் வார ணங்கவர
வாண கோவரையன் வாண்முகத்
தூசி கொண்டுமுடி கொண்ட சோழனெரு
சூழி வேழமிசை கொள்ளவே" (352)

[1. பல்லவராசர்]

இத்தாழிசையிரண்டும் கருணாகரனது உதவிச்சேனாபதிகளிருவரைப் பற்றியனவாம். இவற்றுள், முன்னதிற் கூறப்பட்டவன் பல்லவரசன் என்பவன். இவன் கருணாகரனுக்குப் பதவியில் இளையனாயினும் உடன்பிறப்பால் மூத்தவனென்பது "தொண்டையர்க்கரசு முன்வருஞ் சுரபி" என்னுஞ் சயங்கொண்டார்கூற்றால் வெளியாகின்றது. கருணாகரன் யானைமேற்கொண்டதைத் தனியே மேற்பாட்டுக் கூறிவிட்டமையால், இத்தாழிசை வேறு படைத்தலைவனொருவன் யானையேறியதைக் கூறுவதென்பதும், அவன் கருணாகரனது தமையனை சேனாபதியேயாதல்வேண்டும் என்பதும், அன்னோன் வள்ளன்மையுள்ளவனென்பதும் 'முன்வருஞ் சுரபி' என்ற தொடரினின்று நன்கறியக்கிடக்கின்றன. இத்தொடர்க்கு இங்ஙனம் பொருள்கொள்ளாது வேறுகூறுதல் எவ்வாற்றானுஞ் சிறவாமை உய்த்துணர்க. அபயனது படைத்தலைமை வகித்தவருள், இராசராசமூவேந்தவேளார்—சேனாபதி பல்லவரசர் என்ற ஒருவர் (I.M P. Tj. 189) உளர். இவர், சோழவாசியலிற் பெரிய அதிகாரியாக விளங்கியசெய்தி சாஸனங்கள் பலவற்றால் அறியக்கிடக்கின்றது. இவரன்றி, அபயன்காலத்துச் சேனாபதிப்பதவி வகித்த பல்லவரசர் என்ற பெயருடையார் வேறு காணப்பட்டிலர். கருணாகரனது சகோதரர் இவர் என்பதற்குத் தெளிவான ஆதாரம் இப்போது கிடைத்திலதேனும் சயங்கொண்டார்வாக்காலும் சாஸனக்கூற்றாலும் அவ்வாறு கருத இடமுண்டென்றே சொல்லலாம். கருணாகரனது மூத்தசகோதரர் இவராயின், 'வெள்விடை யுயர்த்தகோன் வண்டையர்க்கரசு' என்று

அப்புலவர், இவர்க்குங் கருணாகரனுக்குரிய விசேடணங்களைக் கூறுதல் பொருத்தமே என்க. இனி, 'தொண்டையர்க் கரசின் முன்வருஞ் சுரவி' என்ற பாடம் மியூஸியம்-புத்தகசாலைப் பாணிப்பிரதியொன்றிற் காணப் படுதலும் அறிந்துகொள்ளற்பாலது.

[2. வாணகோவரையனும், முடிகொண்டசோழனும்]

இரண்டாந்தாழிசை, மற்ற உபசேனாபதிகளான— வாணகோவரையன், முடிகொண்டசோழன் என்ற இருவரும் களிறுகளில் ஏறிய செய்தி கூறுவதாம். இவ்விருவரும் அபயன்காலத்தும் அவன்மகன் விக்கிரமசோழன்காலத்தும் அரசியலிற் றலைமைவகித்தவர்களே. இவருள் முதலவன் அதுவே பெயருடன் வழங்கப்பெறுவன் (I. M. P. Tj. 220) விக்கிரமசோழனுலாவிற் கூத்தரால்—

" புல்லாத மன்னர் புலாலுடம்பைப் பேய்வாங்க
ஒல்லாத கூற்ற முயிர்வாங்கப்—புல்லார்தந்
தாங்கு மடமகளிர் தத்த மிழைவாங்க
வாங்கும் வரிசிலைக்கை வாணனும் "

என்று புகழப்பட்டவன், இவ்வாணகோவரையனேயாவன். அடுத்த உபசேனாபதி, முடிகொண்டசோழ மூவேந்தவேளான் என்று சாஸனங்களிற் கூறப்படுவோனாதல்வேண்டும் (IBID. SA. 986). இவனும் விக்கிரமசோழன்காலத்து அரசியலதிகாரியாக விளங்கியவனே (IBID. SA. 786). அடியில்வரும் சாஸனப்பாடலொன்று இவன் அபயன் காலத்திற் படைத்தலைவனாயிருந்தமை குறிப்பிக்கின்றது.

" புயன்மேவு பொழிற்றஞ்சை முதற்பஞ்ச நதிவாணன் புதல்வன் பூண்ட
வயமேவு களியானை முடிகொண்டான் மாநெடுவேல் வத்தர் வேந்தன்
இயன்மேவு தோளபயற் கிருபத்தை யாண்டதனில் விடர்க்கரம்பைச்
செயன்மேவு மீச்சுரர்க்குத் திருநந்தா விளக்கொன்று திருத்தினனே."
(S. i. i. iv. 470).

மேற்கண்ட தாழிசையுள் வாணகோவரையன் வேழமிசைகொள்ள, முடிகொண்டசோழன் வேழமிசைகொள்ள எனத் தனித்தனி இயைக்க. ஒரு என்றது ஒப்பற்ற என்றவாறு. இங்ஙனம், பிரதமசேனாபதியும் உபசேனைபதிகளும் போர்க்கெழுந்த செய்தியைச் சயங்கொண்டார்

பாடுதலால், சேனைத்தலைவனான கருணாகரன் இகன்மேற்சென்றதைக் குறிக்கும் 353-ம் தாழிசையுள்—'பல்லவர்கோன் வண்டைவேந்தன்' என்று கீழ்க்குறிப்பிற்கண்ட பாடமே கொள்ளத்தக்கதாம் என்க.

(14) சேனையின் செலவு.

" எழுதாளி யடங்க நடந்துதயத்
தேகுந்திசை கண்டது மீளவெழும்
பொழுதேக லொழிந்து கடற்படையெப்
பொழுதுந் தவிராது வழிக்கொளவே " (349)

இத்தாழிசையுள் 'மீள விழும்பொழுது' என்ற பழைய பாடம் 'மீள வெழும்பொழுது' என்று திருத்தப்பெற்றுள்ளது. இப்பாடப்படி 'உதயத்தே செல்லுந்திசையைக் கண்ட சேனை, மீளச் சூரியோதயத்தில் ஏகுதலொழிந்தது' என்பது பொருளாகும். ஆயின் இதற்கு ஒருநாள் விட்டொருநாள் சேனை சென்றது என்பது கருத்தாதல்வேண்டும். இக்கருத்துக்கு 'எப்பொழுதுந் தவிராது வழிக்கொளவே' என்று அடுத்துவருந் தொடர் விரோதமாகவுள்ளது. ஒருநாள் இடைவிட்டுச் சேனை செல்வது, எப்பொழுதுந் தவிராது வழிக்கொள்வதாகாதன்றோ? இவ்வாறன்றி, 'இரவுதோறும் நடந்து உதயந்தோறும் போக்கொழிந்து' என்று கருத்துக்கொள்ளுதற்கும் பாட்டில் இடமில்லை; இது கருத்தாயின், சேனை நடந்தது இரவென்றும், ஏகுந்திசையென்னாது நிற்குந் திசை என்றும் தெளிவாக ஆசிரியர் பாடியிருப்பர். இவற்றாற் புதிய பாடம் பொருட்பொருத்தமுறல் அரிதாகின்றது.

இனி, "மீள விழும்பொழு தேகலொழிந்து" என்ற பழையபாடத்திற்கு—'உதயத்தே செல்லற்குரிய திசையைக் கண்டு நடந்த சேனை, மீளப் பொழுதுசாயுங்கால் ஏகுதல் ஒழிந்து" என்பது பொருளாகும். இதனால் காலை ஏகுதற்கும், மாலை தங்குதற்கும் உரியவாகக்கொண்டு படைகள் வழிக்கொண்டன என்பது பெறப்படும். ஆயின் எப்பொழுதுந் தவிராது எனப் பின்வருந்தொடர் இக்கருத்துடனும் மாறுபடுவதே எனின், அத்தொடரிலுள்ள தவறொன்றைத் திருத்தி நோக்கப் பொருள் செவ்வனே புலப்படுமென்க. அத்தவறாவது—'எற்பொழுது' என்பது, 'எப்பொழுது' எனப் பாடப்பிறழ்வுகொண்டதே

யாம். எனவே, காலையில் நடந்தும், மாலையிற் போக்கொழிந்து சிறிது இளைப்பாறியும், பின் இரவினும் விடாது புறப்பட்டும்—இவ்வாறு சேனையின் பகைமேற்செலவு இடையறாது விரைந்து நடைபெற்றது—என்ற சிறப்புடைப்பொருள் இப்பாடத்தாற் பெறப்படுதல் காணலாம். எற்பொழுது-இரவு; 'எல்லுறு பொழுதிற் செல்ல லோம்பி' என்பது பெருங்கதை (3, 7, 26.)

(15) அளத்திப்போர்.

" தளத்தொ டும்பொரு தண்டெழப் பண்டொர்நாள்
அளத்திற் பட்ட தறிந்திலை யையநீ " (372)

கலிங்கவரசனுக்கு அவன் மந்திரி, அபயனது வீரப்பிரதாபங்களைக் கூறிவருமிடையிலுள்ள இத்தாழிசையுள், 'அளத்திபட்டது' எனற் பாலது 'அளத்திற்பட்டது' என்று பாடப்பிறழ்வு கொண்டுள்ளது. அரும்பதவகராதியிற் குறித்தவாறு, சயங்கொண்டார் இப்பாட்டிட் கருதியது உப்பளமன்று; அளத்தி என்ற ஊரில் அபயனால் நடத்தப் பட்ட போரேயாம். சளுக்கியருடன் நடந்த அப்போரில் அபயனடைந்த வெற்றியை—

" சொல்லெதிர் கோடிற் றல்லது தன்கை
வில்லது கோடா வேள்குலத் தரசர்
அளத்தியி லிட்ட களிற்றின நீட்டமும் "

என, அவன் மெய்க்கீர்த்தி கூறுவதுங் காண்க. கஞ்சம்ஜில்லா 'பர்லாகிமெடி' தாலூகாவில், ஜமீன்றன் தலைமையூராக 'அளதி' என்பதுள்ளது. அபயன் போர்க்களம் இதுவோ வேறோ தெரியவில்லை,

(16) அருவர்.

" ஒருவ ரொருவரி னோட முந்தினர்
உடலி னிழலினை யோட வஞ்சினர்
அருவ ரருவ ரெனவி றைஞ்சினர்
அபய மபய மெனந டுங்கியே " (438)

இத்தாழிசைக்கு—'ஓடவஞ்சினர் சிலர், தம்முடலி னிழலையே (அருவர் அருவர் என=)மாயரூபத்தோடு வந்த சோழவீர ரென்

றெண்ணி, வணங்கினார்கள்' என்ற பொருள் புதுப்பதிப்பில் எழுதப் பட்டுள்ளது. அருவரென்பதற்குக் கவி கருதிய பொருள் இதன்று. மற்று, இத்தாழிசைப் பொருளாவது :—

"(கலிங்கவீரர்) ஒருவர்க்கு முன்னொருவர் ஓடித் தப்பமுந்தினராய், தம் நிழல் பின்தொடர்ந்து ஓடிவர (அதனைப் பகைவர்வருகையாக) அஞ்சி, 'தமிழர்! தமிழர்!!' என்று கதறிக்கொண்டு, அபயமிட்டு நடுங்கி வணங்கினர்"—என்பதாம். அருவர் என்பது வடுகர், தமிழர்க்குவழங் குஞ்சொல்; இது இக்காலத்து அரவர் எனத் திரிந்தது. 'அரவ ரென்பது தமிழராகும்' என்றார் அகராதிநிகண்டுடையாரும். இவ்வாறே, தண்டியலங்கார மேற்கோட்பாட்டொன்றும,

" ஒருவ ரொருவர்மேல் வீழ்ந்து வடநாடர்
அருவ ரருவரென வஞ்சி—வெருவந்து
*தீத்தீத்தீ என்றயர்வர் சென்னி படைவீரர்
போர்க்கலிங்க மீதெழுந்த போது "

என, இவ் வருவர் என்ற சொல்லை வடநாட்டார் (வடுகர்) கூற்றாகக் கூறுதலுங் காண்க. அருவரென்ற வழக்குப்பற்றித் 'தமிழரும் ஆந்தி ரரும்' என்ற தலைப்பின்கீழ்ச் செந்தமிழில் எழுதிய உபந்நியாசத்தும் விரித்துரைத்துள்ளேன்.

(17) பைதல் என்ற சொற்பொருள்.

" கொய்த விறைச்சி யுறுப்பனைத்துங்
கொள்ளுங் கூழை வெள்ளாட்டின்
பைத லிறைச்சி தின்றுலர்ந்த
பாரப் பேய்க்கு வாரீரே" (555)

* 'தீத்தீத்தீ' என்னும் அடுக்கும் தெலுங்குத்தொடரென்பது இப்போது தெரியவருகின்றது. 'தீ' என்பது, அம்மொழியுள்; 'வழிவிடு, ஒதுங்கு' என்ற பொருளில் வழங்குவதாம். சோழவீரரைக் கண்டதும் வடநாடர் அருவரருவ ரென்றஞ்சி, ஒருவரொருவர்மேல் வீழ்ந்து ஓடுநிலையில் 'ஒதுங்கு ஒதுங்கு' (வழிவிடுக, வழிவிடுக) என்றுகூறிக்கொண்டு (போக்கிடமின்றித்) தடுமாறுவர் என்பது இப்பாடற் கருத்தாமென்க. 'நெருப்பு நெருப்பு' என்று அடுக்குதற் குரிய முன்னிகழ்ச்சியொன்றும் பாட்டிற்குறிப்பிடப்பெறாமையால்,இப்பொருள் கூறுதலே தக்கதாதல் கண்டுகொள்க.

இத்தாழிசையுள்—'வெள்ளாட்டின் பைதலிறைச்சி' என்பதற்கு, 'வெள்ளாட்டினுடைய (பைது + அல்=) பசியதல்லாது உலர்ந்த,— இறைச்சி' என்று பதப்பொருளும், 'பெரும்பேயாதலால் உலர்ந்த இறைச்சி வயிற்றுக்குப்பற்றாது உலர்ந்துநின்ற'தென்று விசேடவுரையும் எழுதப்பட்டுள்ளன. பைதல் என்பதனை மேற்கூறியவாறு பிரித்துப் பொருள்காண்டல் கவியின்கருத்தாகாது. அது தனிச்சொல்லாய்க் குழவி, குட்டி என்ற பொருளுடையதாகும். 'பைதல்வெண்பிறை' (தேவா. சுவாமிநா. பதிப். பக். 251, பாட். 2), 'பைதற்பிணக்குழைக்காளி' (ஷ.251,2) என்னும் முன்னோர்திருவாக்குங் காண்க. 'சிறுகிளிப்பைதலே' என்றார் பெரியாரும் (திருவாய். 8. 5. 6). 'வெள்ளாட்டுக்குட்டியின் சிற்றிறைச்சியைத் தின்று தேகம்வற்றிய பெரும்பேய்க்குப் பேராட்டின் முழுவுறுப்புமிட்டுச் சமைத்தகூழை வாரீர்' என்பதே இத்தாழிசைக்குப் பொருள் என்க.

(18—26) பாடச்சிறப்புக்கள்.

இனி, மூலமாகக் காட்டிய பாடங்களிலும் கீழ்க்குறிப்பில் இரண்டாந்தரமாகக் காட்டப்பட்ட பாடங்கள்சில பொருட்சிறப்புடையனவாகவும், வேறுசில திருத்தம்பெறவேண்டியனவாகவும் உள்ளன; அவற்றுட் சில வருமாறு :—

(18) "செய்யதிரு மேனியொரு பாதிகரி தாகத்
தெய்வமுத னுயகனை யெய்தசிலை மாரன்
கையின்மலர் பாதமலர் மீதுமணு காநங்
கன்னிதன் மலர்க்கழல்கள் சென்னிமிசை வைப்பாம்" (15)

இத்தாழிசையுள்—'பாதமலர் மீது மணுகா' என்பதற்குப் பாடபேதமாகப் 'பாதமலர் மீதணியநல்கும்' என்பது கீழ்க்குறிப்பிற் கண்டுளது. 'சிவபிரான்திருமேனியையும் ஒருபாதி கரிதாம்படி எய்த வலியனை மன்மதனையும் அவன் கைக்கொண்டுள்ள மலரம்புகளைத் தன் திருவடிகளில் அருச்சிக்கும்படி செய்தருளுங் கன்னி' என்னும் பொருட்சிறப்பு, 'மீதணியநல்கும்' என்ற பாடத்துக்குப் பெறப்படுதலும் 'கையின்மலர் பாதமலர் மீதுமணுகா' எனின் அத்துணையாகப் பொருட்பேறு சிறவாமையும் உய்த்துணரத்தக்கன. குளகமாய் இப்பாட்டினைத்

தொடரும் அடுத்த தாழிசையுள் 'பாதமலர் மீதணிய நல்கும்' என்னுமுறையே இதனையும் புலவர்பாடுதலின், கீழ்க்குறிப்பிற் காணப் படுவதே மூலபாடமாதற் கேற்ற தென்க. 'கன்னிகமல க்கழல்கள்' என்று சங்கத்தேட்டிற் காணப்படும் பாடம் முன்னையதினும் ஓசைநய முடைத்து.

(19) " ஆனை சாய வடுபரி யொன்றுகைத்
தைம்படைப்பரு வத்தப யன்பொருஞ்
சேனை வீரர்நின் றூர்த்திடு மார்ப்பினிற்
றிமிரி வெங்களத் திற்செவி டானவும்". (136)

இத்தாழிசையுள் 'அபயன் பொருஞ் சேனைவீரர்' என்பது 'அபயன்பெறுஞ்சேனைவீரர்' என்று சங்கத்தேட்டிற் காணப்படுகின்றது. ஈண்டுச் சேனைவீரர் அபயனைச் சார்ந்தவரேயாதலின், அபயனுற் பொரப் படுஞ் சேனை வீரர் என்னுங் கவர்பொருள்தரும் முன்னைப் பாடத்தி னும் பின்னையதே தெளிவுடைத் தென்க.

(20) " உழுந்து தாமுடை மண்டிலந் தண்டினுல்
இழந்த வேந்த ரினையரென் றெண்ணுகேன்" (374)

இதனுள் 'இனையர்' என்பது பாடமாயின், 'படையால் நாடிழந்த வேந்தரை இவ்வளவினரென் றெண்ணுவேன்' என்பது பொருளாய், அவ்வேந்தர் அளப்பிலர் என்று கவி கூறப்புக்க கருத்தோடு மாறுபடும்; அதனுல் 'எனையர்' என்று திருத்தற்பாலது.

(21) " கடுத்த விசையிருள் கொடுத்த வுலகொரு
கணத்தில் வலம்வரு கணிப்பில் தேர்"

என்ற 344-ம் தாழிசையடியுள், முதன் மூன்று சீரும் 'கடுத்த விசையுருள் தொடுத்த' என்று கொள்ளற்குரியன. விசை என்ற விசேட ணம் இருளுக்குப் பொருந்தாமையும், உருளுக்குப் பொருந்துதலும், 'இருள் கொடுத்தவுலகு' என்பதனுற் பொருட்சிறப்பின்மையும் கண்டு கொள்க. உருள்தொடுத்த தேர், வலம் வரு தேர் என இயையும். உருளை இருளென்றும், ககர தகரங்கட்குள் வேற்றுமைகாணுமல் தொடுத்த என்பதைக் கொடுத்த வென்றும் ஏடெழுதுவோர் தவறுதல் இயல்பேயாம்.

(22) " நிழற்கொடி தழற்கதுவ விற்கடி தோளித்தவை
நினைப்பவர் நினைப்ப தன்முனே
அழற்படு புகைக்கொடி யெடுத்தன புதுக்கொடி
யனைத்தினு நிரைத்த தெனவே" (399)

என்பதனுள், 'கடிதொளித்தவை' என்பது 'கடிதொழித்தவை' என்று கொள்ளற்பாலது. 'தழல் கதுவுதலால் விரைந்து அழிக்கப்பட்ட (யானைமேற்) கொடிச்சீலைகள், புதுக்கொடிகணிரைத்தாற்போலப் புகைக் கொடி எடுக்கலாயின' என்பது கருத்தாம். நிழற்கொடி—நிழல் செய்யுங் கொடிச்சீலை.

(23) " அலைபடை நிரைக ணிரைத்த செருக்களம்
அழல்புரி களமெனு வொப்பில விற்படை
தலைபொரா வெரிய நெருப்பினின் மற்றது
தழல்படு கழைவன மொக்கினு மொக்குமே" (406)

இதனுள் 'அழல்புரி களம்' என்பது 'அழல்புரி கலம்' என்றும், 'எரிய' என்பது 'எரியும்' என்றும் கொள்ளற்பாலன. செருக்களம், அக்கினிச்சட்டிபோல அம்பாற் றலையில் தாக்கப்பட் டெரியும் நெருப்பை யுடைமையின், அது தீப்பட்ட மூங்கிற்காட்டை ஒத்தல்செய்யும்' என்பது தாழிசைப்பொருளாம். தலையில் எரியும் நெருப்புக்கு அழல்புரி கலம் உவமை; அழல்புரிகலம்-தீப்பெய்கலம், அக்கினிச் சட்டி;

(24) " பொருநர்கள் சிலர்த முரத்தி னிற்கவிழ்
புகர்முக மிசையடி யிட்ட திற்பகை
விருதரை யரிவர் சிரத்தை யச்சிரம்
விழுபொரு தறையெனு மக்க ளிற்றையே" (427)

இதனுள்—'விழுபொருது' என்பது 'விழுபொழுது' என்று திருத்தற்பாலது. தம் மார்பின்மேற் பாயும் யானைமேல் அடியிட்டேறி அதன்மேலுள்ள பகைவர்சிரத்தை வீரர் அரியவும், அச்சிரம் அற்று விழும்பொழுதும் (பகைவனை) 'அறை' என்று அக்களிற்றுக்குக் கூறு நின்றது —என்ற சிறப்புடைப்பொருள் பெறப்படுதல் காண்க.

(25) " எற்றைப் பகலினும் வெள்ளணி காண்
இருநிலப் பாவை தனைநிழற் றுங்

கொற்றக் குடையினைப் பாடீரே
கோக்குலோத் துங்கனைப் பாடீரே" (520)

இதனுள் 'வெள்ளணிகாண்' என்பதினும் 'வெள்ளணிநாள்' என்ற பழையபாடமே சிறப்புடைத்து. எல்லாநாளினும் வெள்ளணிநாட் சிறப்பை, இருநிலப்பாவைக்குத் தன்னிழலால் அருளுங் குடை எனக. வெள்ளணிநாட்சிறப்பாவது, அரசன் பிறந்தநாளிற் செய்யும் பேருள்; இதனைப் பெருமங்கலம் என்பர் தொல்காப்பியனார். "மங்கலவண்ண மாகிய வெள்ளணியணிந்து எவ்வுயிர்க்கண்ணும் அருளேநிகழ்த்தலின் வெள்ளணி என்ப" என்பர் நச்சினார்க்கினியர்.

(26) " இடைபார்த்துத் திறைகாட்டி யிறைவிதிருப் புருவத்தின்
கடைபார்த்துத் தலைவணங்குங் கதிர்முடிநா றாயிரமே" (523)

இதனுள் 'இறைவிதிருப் புருவத்தின்' என்பது கவி கருதிய தொடரன்றென்று தோற்றுகின்றது. 'நூறாயிரமே' என்று முடிவனவாகக் கீழ்வருந் தாழிசைகளனைத்தும் அபயன்புகழ்கூறுவனவேயாதலின், தேவியின் சம்பந்தம், அவ்வாறு முடியும் இதன்கண்ணும் வருதற்கு இடமின்றும். இடைபார்த்துத் திறைகாட்டிவணங்கல் அரசனுக்கே ஏற்றதாதலுங் காண்க. இதனால் 'இறைவனிரு புருவத்தின்' என்பதுபோன்றிருந்தபாடம் சிதைந்ததாகல்வேண்டும்.

(27) சில தொடர்ப் பொருள்கள்.

சில தொடர்கள் அடியில்வருமாறு பொருள்கொள்ளற் குரியன:—

(1) எயிற்கழுத்து நிணக்கொடியும் (92)—கோயின்மதிலில் அழுந்தக்கட்டிய நிணத்துகிலாகிய கொடியும் எ-று. எயிற்கு என்பது, 'கிழங்குமணற்கீன்றமுளை' என்பதுபோல, உருபுமயக்கம். நிணத்துகில் என்ற வழக்கை 473, 496 முதலிய தாழிசைகளிற் காண்க.

(2) உவைபுட்பகம் (323):—அரும்பொருள்விளக்கத் தெழுதப்பட்டவாறு, புட்பகம் என்பது ஆபரணமன்று; சளுக்கியர்போன்றவரிடமிருந்து பெற்ற உயர்ந்த களிறுகளாம். 'புட்பகப்பிடியும்' என்பது சாஸனவழக்கு.

(3) பேய்க்கு....புரவி யுரித்தோற் பட்டைக்கே பொதிகூழ் பொதிந்து வைப்பீரே (563):—ஈண்டுப் பட்டை என்றது இறை

கூடையையன்று; கமுகம்பட்டை, வாழைப்பட்டைகளிற் பொதிசோறு வைத்துக் கட்டுதல் வழக்காதலின் அதனையே குறிப்பதென்பது, உரித் தோற்பட்டை என்பதனாற் பெறப்படும். 'பாக்குப்பட்டையிற் கட்டுகிற பொதிசோறு' என்பது திருவாய்மொழியீடு (6.4.6). இனிப் பட்டை குடையோலையுமாம்; 'ஆறுசென் மாக்கள் சோறுபொதி வெண்குடை' என்பது அகநானூறு (121).

(4) 'விலக்குக விலக்குக விளைத்தன விளைத்தன':—இத்தொடர்க்குப் பேய்கள் 'இளைத்த இளைப்புக்களை' என்று பொருள் தரப்பட்டுள்ளது. ஈண்டு விளைத்தன விளைத்தன என்பதே மோனைக்கேற்ற அடுக்காதலின், "கலகம்விளைத்தன, விலக்குக' என்று சொல்லும்படி அப்பேய்கள் களிப்புவிளையாடல் புரிந்தன" என்பதே கருத்தாமென்க.

(28) 'இடைச்சேருகலான' தாழிசைகள்.

புதுப்பதிப்பின் 9-ம் பக்கத்துக் கீழ்க்குறிப்பிலே பதின்மூன்று தாழிசைகள் இடைச்செருகலென்று கருதி ஒதுக்கப்பட்டுள்ளன. அங்ஙனங் கருதற்கு, ஒருபிரதியிலிருந்தபடி மற்றப்பிரதியில் இல்லாமையே சிறந்தகாரணமாகத் தெரிகின்றது. ஆனால், இக்காரண மொன்றேபற்றி அவற்றுட் பலவற்றை அங்ஙன மொதுக்குதல் நியாயமன்று. அரிய கருத்துக்களும் தொடர்களும் வழக்குக்களும் அத்தாழிசைகளிற் காணப்படுதலின், ஒருசில அவ்வாறு கருதப்படினும், பெரும்பாலன கொள்ளத்தக்கவை என்பது நோக்குவார்க்கு நன்கு விளங்கும்.

முடிவுரை.

இவ்வாறே திருத்தம்பெறவேண்டிய பாடங்கள் வேறுசிலவு முள்ளன. இவையன்றி, விளக்கப்படவேண்டிய சொற்களுந் தொடர்களும் வழக்குக்களும் பலவாம். அவற்றையெல்லாம் எழுதின் விரியுமென்று, குறிப்பிடத்தக்கனவற்றையே வெளியிடலாயினேன். இவ்வாராய்ச்சியுட் கண்ட விஷயங்கள் இனிவரும் பாணிப்பதிப்புக்கு ஏற்றபெற்றி உதவக் கூடியனவாயின், அதுவே எனது இச்சிறுமுயற்சிக்குப் பெரிய பிரதிப் பயனாகும்.

இங்ஙனம்,

மு. இராகவையங்கார்.

உ

பட்டத்தான்மங்கலம் செப்பேடுகள்.

[பட்டத்தான்மங்கலம் செப்பேடுகள் 5 இதழ்க ளுடையன திருத்துறைப்பூண்டித் தாலூகாவில் அகப்பட்டவை. இப்பொழுது சென்னைக் கல்வெட்டிலாகாதாரால் விலைக்குவாங்கப்பட்டிருக்கின்றன. இவற்றைக் கல்வெட்டிலாகாக்காரர் கைக்கொள்ளுமுன் யான் பார்க்கநேர்ந்தமையால் அவற்றின் பிரதியொன்று தயாரித்தேன். அது பல்லவ அரசாட்சியி லுள்ள ஒரு சிக்கலையறுப்பதால் அதனை எனது நண்பர் உ. வே. திருமலை தாத்தாசாரியஸ்வாமிகளது உதவிகொண்டு பொருள்கண்டவாறு வெளியிடுகின்றேன்.]

ஸ்வஸ்திஸ்ரீ

[illegible]
[illegible]
[illegible]
I [illegible] ॥ க

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ உ

[illegible]
[illegible]
[illegible] III
[illegible] ॥ ௩

I. இது பொருள் விளங்கவில்லை.

II. 'ஸ்வஸ்தி' மென்றிருக்கிறது அப்படி இருந்தால் சுலோகம் குறையும்.

III. 'விஜய' என்றிருக்கிறது.

6

[illegible] [IV]
[illegible] ॥

[illegible] ॥

[illegible] ॥

[illegible] ॥

[illegible] ॥

[illegible] ॥

IV. 'ஸாவந்தி' என்றிருக்கிறது.

V. 'ஸெந்த்ரஸ்ஷ ந்தி' என்றிருக்கிறது.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௬

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௰

[illegible] VI.
[illegible]
[illegible]
[illegible] VII ௰௧

[சுலோகங்களின்பொருள் :—(1) கடல்நீரைக் குடிக்கவரும் காரின் மின்னலோ இவ்வுருவெனச் சொல்லும்படி பல கைகளோடு மரகதவண்ணமாய் மார்பில் கௌஸ்துபத்தின் காந்திவிளங்கப் பாற்கடலிற்பள்ளி கொண்ட லக்ஷ்மீகாந்தனை பரமாத்மா உங்களுக்கு மங்களத்தை அளிக்கட்டும்.

(2) மோக்ஷத்திற்குச் சாதனமாயும், அசையாதவஸ்துவாயும், யோகிகளின் தியானப்பொருளாயும், அந்தணர்களால் மனவுறுதியோடு வேதமோதிப் போற்றப்படுவதாயும், பேதமற்றதாயினும் முக்குணவசத்தாற் காத்தல் அழித்தல் ஆக்கல் என்ற தொழில்களைச் செய்வதற்காகப் பேதத்தையடைந்ததாயும், எங்கும் நிறைந்ததாயும் உள்ள பரம்பொருள் உங்களைக் காக்கட்டும்.

VI. 'உத்தரீயம்' என்றிருக்கிறது. பொருள்விளங்கவில்லை.

VII. முதலெட்டுச்சுலோகங்கள் முதலிதழிலும் மற்றச் சுலோகங்கள் இரண்டாவது இதழிலும் எழுதப்பட்டுள்ளன.

(3) நரகாசுரனைச் சங்கரித்த ஸ்ரீமந்நாராயணனுடைய உந்திக் கமலத்தினின்றும் பிரும்மா உண்டானார். அவரிடமிருந்து ஆங்கீரசும் அவரிடமிருந்து தேவகுருவும் அவரிடமிருந்து முனிசிரேஷ்டரான சையுவும் தோன்றினார்கள். அந்த வம்சத்தில் யுத்தத்திலும் வில் வித்தையிலும் பிரஸித்திபெற்றவீரரான துரோணர் உண்டானார். அவரிடமிருந்து தடுக்கமுடியாத வீர்யத்தையுடையவரும் பெருமையை யுடையவருமான அசுவத்தாமா தோன்றினார். அவரிடமிருந்து பல்லவர் தோன்றினார்.

(4) இலக்ஷ்மிதேவியும் பூமிதேவியும் அந்த அசுவத்தாமனின் குலத்திலுதித்த அரசர்களுக்குக் களத்ரமாகவிளங்கினர். இப்பொழுதோ வெனில் (இவர்களைத்தவிர) மற்றுமுள்ள அரசசமூகங்களுக்கும் உரியவராயினர்.

(5–6) குலவிருதமான கீர்த்தியைத்தேட உலகத்திலுள்ள சத்ருருக்களைஜயித்து, யாசகர்களுக்கு மிகுதியாகப் பொருளைக் கொடுத்து உதவின அவ்வம்சத்திலுள்ள சுகிருதிகளான அரசர்களாகிய வீரகூர்ச்சன் முதலியவர்கள் வெகுகாலம் பூமியை அனுபவித்து ஆன்மாவைப் பயனுறச்செய்யவேண்டி ஸ்வர்க்கத்தை யடைந்தபொழுது அவர்களுள்ளே சக்கரவர்த்தியான இரணியவர்மனென்று ஒரு அரசன் இருந்தான். ஸமஸ்தான அரசர்களுடைய முடிகளால் உரசப்பட்ட அடிகளையுடைய நந்திவர்மா அவனுக்குக் குமாரனாகப் பிறந்தான்.

(7–10) தனக்கு வசியமானவனும் உலகத்திற் பிரசித்தபலங் கொண்டவனுமான அவன் இளவரசனாகவே உறையினின்றும் வெளியி லெடுக்கப்பட்டவாளைக் கையிலேந்தியவனாய் ஒருவனாகவே எவன் எல்லா அரசர்களையுங் கொன்றும் ஜயித்தும் மறுபடியும் அரசர்களுடைய கிரீடங்களாகிற பீடத்தில் தன்னுடைய பெயரைநாட்டினானோ, எந்த அரசனுடைய கீர்த்தியினாலே எல்லா உலகமும் வெளுத்ததான திசைகளை யுடையதும் இருளற்றதுமாகஆயிற்றோ, எவன் சூரிய சந்திரர் தோற்றத்தால் தாமரை ஆம்பல் முதலிய நீர்ப்பூக்கள் பூப்பதுபோல் அரசருக் கிருக்கின்றானோ, எவனுடைய வாயிற்படியிற் களப்ரர் வல்லபர் கேரளர் பாண்டியர் சோழர் துளுவர் கொங்கணர் முதலாயவர் உள்ளேநுழைவதற்ச் சமயத்தை எதிர்பார்த்தவர்களாக இருந்து அவ்வரசனைக்காணச்

சமயம் வாய்க்காதவர்களாயிருக்கின்றார்களோ, அப்படிப்பட்டவ (நந்தி வர்ம)னுக்கு வேலைக்காரன், உத்தமன, தவத்திற்கும் குணத்திற்கும் இருப்பிடம், சூரன், சிறந்தவன், நல்லோர்களால் வெகுமதிக்கப்பட்டவன், தன்னுடைய மானத்தையே பொருளாகக்கொண்டவன், எங்கும் நிறைந்த புகழையுடையவன், தன் எஜமானனுக்கு அறிவித்துவிட்டுப் பிராமணகளுக்கு வேண்டியபடிகொடுத்தவன்; அவன் மங்கள ராஜ்யத்தின் அதிபதியாக இருந்தான்.

(11) பல்லவனது வேலைக்காரனை மங்களராஜ்ய அரசனது இந்த சூக்தியானது நிலம் நீர் சந்திரசூரியர் உள்ளவரையில் நடப்பதாக.

[தமிழ்ப்பாகம்.]

கோவிசைய நந்திவிக்கிரமவருமர்க்குVIII யாண்டு அறுபத் (23) தொன்றாவது மங்கலநாடாள்வான் விண்ணப்பத்தால் ஆலப்பாக்கவிசைய நல்லூரா ன(24)ணத்தியாக சோழநாட்டு தென்கரைIX ஆர்வலிக்கூற் றத்து-நாட்டார் காண்க தங்களுட்டு-

[3-வது ஏடு முன்புறம்.]

(25)த் தளிக்[கொளத்து] நதிவரையிற் சுற்று நாற்பதிற்றுவேலியுள்ளும் பழம்பிரமதேய மிருபத்துநால் (26) வேலியும் நீக்கி நின்ற பதினாறு வேலியுள்ளும் யாண்டு அய்ம்பத்தொன்பதாவது மங்கல (27) நாடாள் வான் விண்ணப்பத்தால் ஆலப்பாக்கவிசையநல்லூரா ணத்தியாகப் பெருமா(28)னடிகளும் பிரமதேயமாக அருளிச்செய்த பன்னிருவேலியும் யாண்டு அறுபத்தொ(29)ன்றாவது மங்கலநாடாள்வான் விண்ணப்பத்தால் ஆலப்பாக்கவிசையநல்லூரா (30)ணத்தியாக அருளிச்செய்த நால் வேலியும் உள்ளிட்டு பதினாறுவேலியும் ஊர்க்கூ(31)று புள்ளிவழியால் மனையும் மனைப்படப்பும் ஒழிவின்றிப் பிரமதேயமாகப்பணி-

[பின்புறம்.]

(32)த்தோமென்று நாட்டார்க்கு விட்டதிருமுக நாட்டார் தொழுது தலைக்குவைத் தெல்லை(33)போய்க் கல்லுங் கள்ளியுங் நாட்டிப் பிடாகை

VIII. ‘பற்மற்கு’ என்றிருக்கிறது. இதுபோன்ற எழுத்துப்பிழைகள் திருத்தியே பதிப்பிக்கப்பட்டுள்ளன.

IX. ‘தென்கரை’ என்பது காவிரியின் தெற்கு. ‘ஆர்வலிக்கூற்றம்’ திருத்துறைப்பூண்டித்தாலுகாவில் இருக்கிறது. இப்பொழுது ‘ஆரிவலம்’ என்று வழங்கப்படுகிறது.

வலஞ்செய்து நாட்டார்விடுத்த அறை(34)யோலைப்படி ஊர்க்கூறு பள்ளி வழியாற் பதினறுவேலிக்கும் நின்ற மனையும் மனைப்(35)படப்பும் குளமும் கொட்டகாரமும் உவரியும் ஊர்பாழும் காடும் ஓடையும் நீர்பூசி (36) நெடும்பரம்பெறிந்து உடும்போ டியாமைதாழ்ந்ததெல்லாம் கோவும் பொதியு(37)ந் திறந்து குடிநீக்கி ஸாமாந்யமென்று பட்டிப்படியும் ஸர்வபரிஹாரமும் பெற்று வ்யூஹநெ [பிரும்மதே] (38) யமாயிற்று; இவ்வூர் பெற்ற பரிஹாரமும் வட்டிநாழியும், புதர்நாழியும் மன்றுபாடும், ஊராட்சி-

[நான்காவது இதழ் முன்புறம்.]

(39)யும் தரகுங் கூலமும் ஈழம்பூட்சியு மிடைப்பூட்சியும் நாடுகாவலும் ஊடுபோக்கும் (40) உப்புக்காச்சுகையும் நல்லாவும் நல்லெருதும் நேர்வாயமும் இவை யுள்ளிட்டு (41) கோத்தொட்டுண்ணப்பாலவெல்லாம் எவ்வகைப்பட்டவும் உண்ணப்பெறுதாராகப்(42)பட்டத்தானமங்கல மென்னும் பேராற் பிரமதேயமாக பெற்ற நல்கூர் (43) பார்ப்பார் கௌதமகோத்திரத்து இரணியகேசிசூத்திரத்து நெற்குன்றத்து கிரம (44)வித்த நாகூளபட்டனும— ......ணணகோத்திரத்து இரணியகேசி சூத்திரத்து மயிலா (45) ப்பூர் நந்திவர்மபட்டனும்—கௌதமகோத்திரத்து ஆவத்தம்பசூத்திரத்து மேமங்கி (46)வெண்ணைச்சடங்கவியும் —இராதிந்த்ர கோத்திரத்து ஆவத்தம்ப சூத்திரத்து குரவஸ்ரீ-

[நான்காவது பின்புறம்.]

(47) அக்நிவர்மதிருவேதியும்—வாதுல கோத்திரத்து ஆவத்தம்ப சூத்திரத்து திருவேதி (48) வர்மொத்தவர்மனும் —மாடலகோத்திரத்து இரணியகேசிசூத்திரத்து எனூர் புச்சவி (49) ண்ணசடங்கவியும் — ஆத்திரையகோத்திரத்து ஆவத்தம்பசூத்திரத்துக் கோப்பத்(50)து குமாரவர்மச் சடங்கவியும்—இக்கோத்திரத்து இச்சூத்திரத்து உனு.... ....(51)மண்டைச்சடங்கவியும்—கப்பகோத்திரத்து ஆவத்தம்ப சூத்திரத்து சிறுபுஞ்ச (52) கில் சேந்தவர்மச்சடங்கவியும்—கோதம கோத்திரத்து ஆபத்தம்பசூத்திரத்து வங் (53) கிப்புறத்துசடங்கவி தாயவர்மனும்—இக்கோத்திரத்து இச்சூத்திரத்து இவ்வூர்குமா (54)ர வர்மதிருவேதியும்—கௌண்டின்யகோத்திரத்து ஆவத்தம்பசூத்திரத்து ......

[ஐந்து முன்புறம்.]

(55) மறுத்து தேவடிக்கிரமவித்தனும்—கோதமகோத்திரத்து ஆபத்தம்ப சூத்திரத்து (56) வங்கிப்புறத்துப் பப்பவர்மச்சடங்கவியும்—வாதுலகோத்திரத்து ஆவத்தம்ப சூத்திர(57)த்து காரம்பிச்செட்டு சேந்த(58)பவர்மன் பங்குரையும்—ஆத்திரேயகோத்திரத்து ஆவத்தம்ப சூத்திரத்து காமபுறத்து சேந்தவர்மபங்குரையும்—ஒவற்கிதன் அஞ்ஞூற்று (59) வனும் இவ்வெழுத்து வெட்டினேன் கச்சிப்பேட்டை பனைச்சேரிவிடேல்விடுகு (60) பல்லவப்பெருந்தச்சன்மகன் ஸ்ரீதண்டியேன்.

[இச்செப்பேட்டைப்பற்றி எழுதிய சென்னைக் கல்வெட்டிலாகாக்காரர், இச்செப்புப்பட்டயம் தெள்ளாறெறிந்த மூன்றும் நந்தியதென்பர். மேலும், இதிற்கண்ட "மிகநீண்டகாலமான ஆட்சிவருஷத்தாலும் மஹாபலிபுரத்திற் கண்ட நீண்டஆட்சிவருஷத்தாலும் நந்திபோத்தவர்மனும் தண்டாந்தோட்டம் செப்பேட்டிலும் வல்லம் கல்வெட்டுகளிலும் காணப்படும் கோவிசைய நந்திபோத்தவர்மனும் [நந்திவர்மன் III]ஒருவரே. மகாபலிபுரத்திற்கண்டவருடமே இதுவரையிற் கண்டதில் உயர்ந்தது. தண்டாந்தோட்டம்செப்பேட்டிற்கண்ட எழுத்துக்களும் இந்தப்பட்டயத்திற் கண்ட எழுத்துக்களும் ஒரேவிதமாய் இருக்கின்றனவாயினும் 'த' என்ற எழுத்துமாத்திரம் இதனில் தனிப்பட எழுதப்பட்டிருக்கிறது இது இந்தச் செப்பேடுகள் வெட்டப்பட்ட மூன்றுவருஷகாலவேறுபாட்டால் ஏற்பட்டிருக்கவேண்டும். இந்தச்செப்பேட்டில்தான் முதன்முதலாக நந்தி III இளமையில் சிம்மாசனமேறினனென்றும் வல்லபகளப்பரகோளாதியர்களை ஜயித்தானென்றும் சொல்லப்படுகிறது. இவனுடைய மற்றையசெப்பேடுகள் இதுவிஷயத்தில் ஒன்றும் கூறவில்லை" என்றெழுதுகிறார்கள்.

நந்தி என்று பெயருடையார் மூவராவர். ஸ்கந்தவர்மனின்புதல்வனான நந்திவர்மன் முதலாமவனாவான். இவன் ஏறக்குறைய கி. பி. 534ற் சிம்மாசனமேறினனென்பர். இரணியவர்மனதுபுத்திரனான நந்திவர்மன் இரண்டாமவனாவான். இவன் ஏறக்குறைய கி. பி. 742ல் சிங்காதனமேறினனென்பர். மூன்றாமவன் தெள்ளாறெறிந்தவனும் நந்திக்கலம்பகம்கொண்டவனுமான நந்திவர்மனாவான். இவன் தந்திவர்மனது புத்திரன் என்று கூறப்பட்டிருக்கிறது. இம்மூவர்களுள்

இச்செப்பேட்டிற்கண்ட கோவிசையநந்திவிக்கிரமவர்மன் இரணிய வீர்மனது புத்திரனென்று ஆறாவது சுலோகத்தின் உத்தரபாகம் கூறு கிறது. மூன்றாம்நந்தி நந்திவர்மனது புத்திரனென்று பாகூர்ச்செப்பேடு களும் (சுலோ 12) வேலூர்ப்பாளையம்செப்பேடுகளும் கூறும்.

(1) இதனாலேயே இச்செப்பேடுகள் மூன்றாம்நந்திவர்மனுடையன வல்லவென் றேற்படுகிறது.

(2) மூன்றாம்நந்திபின்கல்வெட்டுக்கள் இருபத்தாறுயாண்டுகட்கு மேற்படக் காணப்படவில்லையென்பர் பல்லவசரித்திரவாராய்ச்சியாளர். அதற்குமேலும் காணப்படுமாயின் அது சோழவமிசத்து விஜயாலயன் ஆதித்தன்காலத்துள் வந்து முட்டுப்படுமென்றும் கூறுவர். இதற்குச் சரியானசமாதான மேற்படாதது கொண்டு இவன் மூன்றாம்நந்தியல்ல வென்றேற்படும்.

தண்டாந்தோட்டப் பட்டயங்களின் எழுத்துக்களும், இச்செப் பேட்டெழுத்துக்களு மொன்றாயிருப்பதனால் இவ்விருசெப்பேடு களிலும் கண்டவ ரொருவரேயாவர். வேலூர்ப்பாளையப் பட்டயத்தின் எழுத்தும் தண்டாந்தோட்டத்தின் எழுத்தும் வேறுபட்டனவென எழுத்தாராய்ச்சியாளர்கூறுவர். வேலூர்ப்பாளையம் பட்டயத்தரசன் தெள்ளாறெறிந்த மூன்றாம்நந்தி. ஆகவே இவனும் நமதுசெப்பேட் டரசனு மொருவனாகான். இம் முக்காரணங்களாலும் இச்செப்பேட் டரசன் தெள்ளாறெறிந்த மூன்றாம்நந்தியல்லவென்பது முடிந்ததாம்.

இனி இவன் யாரென ஆராய்வோமாயின் இவன் (1) இரணியவர்ம னின்மகனாவான்; (2) அறுபத்தோராண்டு அரசாண்டவன்; (3) பழைய எழுத்துக்களையுடையவன். இவைகளையுடையவன் இரண்டாம்நந்தி யாவன். மூன்றாம்நந்திபின்பாட்டன் இவனே. சிறுவயதில் அரசாளத் தொடங்கினவன் இவன்தானென்பதற்கு மற்றொருசான்றாயிருப்பது இவன் சேர சோழ பாண்டிய களப்பிரரைச் செயித்ததுமாம். மூன்றாம் நந்திநாளிற் சோழவமிசம் தலையெடுத்துவிட்டது. இரண்டாம்நந்தியின் பெற்றோன் இரணியவர்மனென்று வாயலூர்க் கல்வெட்டினின்றும் காட்டப்பட்டிருக்கிறது. இதனைச் செவ்வனேகண்டவர் புதுச்சேரியி லுள்ள கலோனியல்கல்லூரி ஆசிரியர் டாக்டர் தூப்ரேயில் துரைமகனார். இவைகளாலே இச்செப்பேட்டரசன் இரண்டாம்நந்திவர்மன் என்பது ஒருதலை.]

இலக்கணவிளக்கபரம்பரை,

திருவாரூர்-சோமசுந்தரதேசிகன்.